சபுகஸ்கந்தையில் உள்ள லங்கா இன்டஸ்ட்ரீட் எஸ்தேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் துல்ஹிரியிலுள்ள மாஸ் குழுவால் இயக்கப்பட்ட மாஸ்ஃபேப்ரிக் பார்க் என்பன போன்ற அரச மற்றும் தனியார் துறையினரின் கூட்டுப் பங்கேற்புடன் இப்பேட்டைகளில் சிறந்த முன்மாதிரிகளைக் கொண்டு நடாத்தப்படவுள்ளன.

2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகளுக்கு மத்தியில் “பொருளாதார இணைப்புப் பாலங்கள் என்று அழைக்கப்படும் அதிவேகப் பாதையின் இரு மருங்கிலும் கைத் தொழில்மயமாக்கல் செயற்பாட்டினை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டிலுள்ள அதிவேகப் பாதைப் பயன்பாட்டினை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டுள்ளது. அதற்கமைய, அதிவேகப் பாதைக்கு அண்மையில் பதிய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்குச் சாத்தியமான இடங்கள் அடையாளங் காணப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலீட்டு வலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்றவாறு அடையாளங்காணப்பட்ட இடங்களான பிங்கிரிய, மில்லெனியா, மாவத்தகம, வகாவத்தை மற்றும் சார்லி மவுண்ட் தோட்டம் - மாத்தறை ஆகிய ஐந்து இடங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்ப ட்டுள்ளதோடு, ஏனைய நிரல் முகவர்களின் கூட்டு முயற்சிகளுடன் அபிவிருத்திக்கான செயல்முறைகள் பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன.

தற்பொழுது இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் 12 கைத்தொழிற் பேட்டைகள் ∴ ஏற்றுமதி பதப்படுத்தல் வலயங்கள் செயற்படுத்தப்படுவதோடு, அவற்றில் சில இறுதியாக 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வலயங்கள் 18 ஆண்டுகளுக்குப் பின்னர் மிண்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவைகளாகும்.

இலங்கை முதலீட்டுச் சபையானது முதலீட்டுக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக புதிய வலயங்களை அபிவிருத்திசெய்யும் போதும் காணிகளை அடையாளங்காண்பதற்கும், சுற்றுச் சூழல் தொடர்பில் குறிப்பாக, கழிவு முகாமைத் தேவைப்பாடுகள் மற்றும் தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் இணைந்த வகையில் வலயங்களிலுள்ள அனைத்து கருத்திட்ட செயற்பாடுகளும் வசதியளிக்கப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் அதிகம் கரிசனை காட்டுகிறது.

| | கருத்திட்டப் பெயர | பின்பற்றப்பட்டுள்ள பெறுகை வழிகாட்டல்கள | கருத்திட்டத்தின் தற்போதைய நிலவரம் |
|---|---|---|---|
| 1. | மில்லெனிய ஏற்றுமதிச் வலயத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் | பிங்கிரிய, மில்லெனிய மற்றும் சார்லி மவுண்ட் எஸ்டேட் - மாத்தறை போன்ற 3 உத்தேச வலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>பெறுகை வழிகாட்டல்களானது நிதி அமைச்சின் அரச மற்றும் தனியார் கூட்டுப் பங்களிப்ப பிரிவுக்கு அமையப்பெறப்பட்டுள்ளது. | **மில்லெனிய ஏற்றுமதி பதப்படுத்தல் வலயம்**<br><br>- மில்லெனிய ஏற்றுமதி பதப்டுத்தல் வலயத்தின் கட்டம் ஐ இற்கான காணி சுவீகரிப்பு தற்போது இடம்பெறுகிறது.<br>- திட்ட வடிவமைப்பானது பூரணப்படுத்தப்பட்டுள்ளது.<br>- தெற்கு அதிவேகப் பாதையில் புதிய இடை மாறல் மற்றும் மில்லெனிய ஏற்றுமதி பதப்படுத்தல் வலயத்திற்கான உத்தேச இடைமாறலிருந்தான குறுக்கு வீதி என்பன வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிருமாணிக்கப்படவுள்ளது.<br>- ஏற்றுமதி பதப்படுத்தல் வலயத்திற்கான சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடானது கைத்தொழிற்துறை தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது<br>- 10 மெகாவாட் வரையிலான ஆரம்பகட்ட மின் வழங்கல் களுத்துறை மின் உப நிலைய வலையமைப்புலிருந்து வழங்கப்படும். 33 கி.வோட்டு மின் இணைப்புக்களை வழங்குவதற்கான வடிவமைப்பு இ.மி.ச இனால் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. மேலதிகமாக 25 மெகாவோட் மின்சாரம் வழங்குவதற்காக ஹொரண, வகாவத்தையில் மின் வழங்கல் உப வலையமைப்பு நிலையமொன்று தாபிக்கப்படும்.<br>- நாளொன்றுக்கு 500 கன லீற்றர் நீர் வழங்குவதற்காக நீர் இணைப்புக்களை வழங்கும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன. நாளொன்றுக்கு 8000 கன லீற்றர் நீர் வழங்குவதற்காக நீர் இணைப்புக்களை வழங்குவதற்கான வடிவமைப்பு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |
| 2. | புதிய கைத்தொழில் வலயத்தினை பிங்கிரியவில் தாபித்தல் | | **பிங்கிரிய கைத்தொழிற்பேட்டை**<br><br>- நிலத்தின் பெறுமதியினை மதிப்பீடுசெய்தல் - அபிவிருத்திச் செலவினத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாரத்தில் நிலத்தின் பெறுமதி இலங்கை முதலீட்டுச் சபைக்கு கையளிக்கப்படும்.<br>- மண் தொடர்பான ஆய்வுகள் – கட்டம் I மற்றும் கட்டம் II தொடர்பிலான இறுதியறிக்கைகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் கையளிக்கப்பட்டுள்ளன.<br>- நீர் - குளாய் வழங்கல், நிலக் கீழ் குளாய் பதித்தல் என்பனவற்றுக்கான கேள்வி மனுக்கோரலுக்கான ஆவணங்களை நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை தயாரித்துள்ளது.<br>- மின்சாரம் – மின் இணைபுக்களை ஏற்படுத்துவதற்காக பாதைகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை முதலீட்டுச் சபை மேற்கொண்டுவருகிறது<br>- வீதி அபிவிருத்தி அதிகாரசபை. – குறுக்கு வீதிகளை அமைப்பதற்காகன மதிப்பீடுகள் வீ.அ.அ.சபையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட பணிகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | கருத்திட்டப் பெயர | பின்பற்றப்பட்டுள்ள பெறுகை வழிகாட்டல்கள | கருத்திட்டத்தின் தற்போதைய நிலவரம் |
|---|---|---|---|
| | | | - திட்டத்தினை தொகுதியாக்கல் – கட்டம் I , II க்கான கருத்தியல் வடிவமைப்புத் திட்டங்கள் முதலீட்டுச் சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளது.<br>- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு – கைத்தொழில் தொழில்நுட்வியல் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்கமைய ஆரம்ப கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 3. | மாவத்தகமை | | காணியொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக காணி ஆணையாளர் நாயகத்தோடு கலந்துரையாடப்படுகின்றது. |

## ➢ மில்லெனிய கைத்தொழில் வலயம்

கருத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவினமான ரூபா 8.3 பில்லியன் மற்றும் 1 பில்லியன் (திரட்டு முற்பணம்) என்பன வலய எல்லையில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 500 கன லீற்றர் (கட்டம் ஐஐ) நீர் வழங்குவதற்கான ஏற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு 10,000 கன லீற்றருக்கான இணைப்பு (கட்டம் ஐஐ) வடிவமைத்தல், விலை மனுக்கோரலுக்கான ஆவணத் தயாரிப்புச்செயற்பாடுகள் என்பனவு தற்போது இடம்பெறுகின்றன.

கைத்தொழில் வலயத்திற்கு ஆரம்ப கட்ட மின்சக்தி தேவைப்பாடுகள் (10 மெகாவாட் வரை) வழங்குவதற்கும் வகாவத்தை உத்தேச கிராம சேவையாளர் பிரிவிலிருந்து மில்லெனிய கைத்தொழில் பேட்டைக்கு 20 மெகாவாட் மின் வழங்கலுக்கான அர்ப்பணித்த மின் இணைப்புச் சேவை என்பனவற்றுக்குமான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கருத்திட்டத்தின் மொத்த செலவினமான ரூபா 1100 மில்லியனிலிருந்து ரூபா 336 மில்லியன் திரட்டு முற்பணக் கொடுப்பனவாக விடுவிக்கப்பட்டுள்ளது.

## ➢ பிங்கிரிய கைத்தொழில் வலயம்

கருத்திட்டதிற்காக மதிப்பிடப்பட்ட செலவினமான ரூபா 2.2 பில்லியன் மற்றும் 116 மில்லியன் (திரட்டு முற்பணம்) என்பன வலய எல்லையில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது. சிலாப நீர் வழங்கல் திட்டத்திலிருந்து (கட்டம் ஐ) நாளொன்றுக்கு 1000 கன லீற்றர் (ஆரம்ப கேள்வி) நீர் வழங்குவதற்கான ஏற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மின்சாரத்தினை வழங்குவதற்கான வேலைத் திட்ட மதிப்பீடு தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. மின் வழங்கலுக்கான பொருட் கொள்வனவு தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. பிங்கிரியப் பகுதிக்கு 2 மெகாவொட்டு மின் இணைப்பினை வழங்குவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிங்கிரிய - துந்தோட்டை (தும்மல சூரிய) வரையில் கட்டம் ஐ இல் இரு வழிப் பாதையொன்றினை அமைப்பதற்கான பணிகள் மற்றும் திட்ட வடிவமைப்பு என்பன வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உத்தேச காணிக்கான விலை மதிப்பீடு பெறப்பட்டுள்ளதோடு அதற்கான கொடுப்பனவானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு வழங்கப்படவுள்ளது.





## 3.5 2018 முதலீட்டு சபையின் முலீட்டு செயலாற்றுகை

### அ. கருத்திட்டங்களின் நிலை

| குறிகாட்டி | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ மி) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ மி) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ மி) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ மி) |
| அனுமதிக்கப்பட்டது | 227 | 593,433 | 205 | 906,243 | 150 | 627,959 | 128 | 389,387 |
| உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது | 157 | 289,992 | 186 | 758,068 | 104 | 429,816 | 94 | 221,404 |
| ஆமுல்படுத்தப்பட்டது | 100 | 112,314 | 111 | 154,986 | 91 | 458,349 | 71 | 131,149 |
| வர்ரத்தக ரீதியான தொழிற்பாடுகளை ஆரம்பித்தது | 103 | 65,126 | 82 | 97,656 | 82 | 82,701 | 52 | 53,151 |

குறிப்பு: விரிவுபடுத்தல் உள்ளடங்கலாக

### ஆ. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (குனுஐ) - 2018

2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு ருளுகூ 2,367 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும், இது இலங்கைக்கு மிக அதிகமான பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு வருவாயாகும். இது 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ருளுகூ 1,710 மில்லியன் வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் ஒப்பிடுகையில் 38மூ அதிகரித்துள்ளது.

துறைசார் பங்களிப்பு - FDI (2018)

| துறை | வெ நே மு (ஐ.அ.டொலர் மில்லியன்) |
|---|---|
| தயாரித்தல் | 291.48 |
| வேலாண்மை | 0.46 |
| சேவைகள் | |
| ஹோட்டல் மற்றும் உணவகம் | 223.37 |
| தகவல் தொழில்நுட்பம் வியாபாரச் சேவைகள் வெளியில் பெற்றுக்கொள்ளல் | 58.74 |
| ஏனைய சேவைகள் | 19.15 |
| உட்கட்டமைப்பு | |
| வீடமைப்பு ஆதண அபிவிருத்தி | 397.76 |
| தொலைபேசி மற்றும் தொலை தொடர்பு வலையமைப்பு | 522.18 |
| மின் உற்பத்தி | 0.01 |
| எரிபொருள் வாயு, பெற்றோலியம், ஏனைய | 3.74 |
| துறைமுக கொள்களன் முணையம் | 849.98 |
| மொத்தம் | 2,366.86 |

துறைசார் பங்களிப்பு - FDI (2018)



நே. வெ. மு போக்கு (1978-2018)




## இ. முதலீட்டுச் சபை கம்பனிகளின் ஏற்றுமதிகள்

2018 ஆம் ஆண்டில், முதலீட்டு சபையின் கீழ் உள்ள நிறுவனங்கள், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10மூ அதிகரிப்புடன், 8,495 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.



ஈ 2018 இன் போது அமுலாக்கப்பட்ட / ஆரம்பிக்கப்பட்ட முக்கிய வணிக கருத்திட்டங்கள்

| இலக்கம் | கம்பனியின் பெயர் | வியாபார நடவடிக்கைச் செயற்பாடு | துறை |
|---|---|---|---|
| 1 | லண்வா சன்ஸ்தா சீமெந்து கோப்ரே'ன் லிமிடட் | சீமெந்து அரைத்தல் மம களத்தல் தொழிற்சாலை | தயாரித்தல் |
| 2 | ஹாபர் விலேஸ் பிரைவட் லிமிடட் | கலப்பு அபிவிருத்தி கட்டிடத் தொகுதி | உட்கட்டமைப்பு |
| 3 | பெஸ்ட் பசுபிக் டெக்ஸ்டைல் லங்கா பிரைவட் லிமிடட் | கலப்பு துணிச் செயன்முறைப்படுத்தல் | ஆடை |
| 4 | வெஸ்டன் பவர் கம்பனி பிரைவட் லிமிடட் | 10 மெ வா கழிவு மின்சக்தி பொறித் தொகுதி | பயன்பாடுகள் |
| 5 | சமசீசன் லிமிடட் | 212 ரூம் அறைகள் வெலிகம | சுற்றுலா மற்றும் ஓய்வு |
| 6 | சிலோன் ஹொலிடே ரிஸோஸ் லிமிடட் | ஹோட்டல் | சுற்றுலா மற்றும் ஓய்வு |
| 7 | இன்கூப் குலொபல் பிரைவட் லிமிடட் | ஏற்றுமதி வர்த்தக நிலையம் | ஆடை |
| 8 | மெரினோ பீச் பிரைவட் லிமிடட் | 350 அறை 3 நட்சத்திர ஹோட்டல் | சுற்றுலா மற்றும் ஓய்வு |
| 9 | வோக்கர்ஸ் சீஎம்எல் புரொபிடி டிவலப்மன்ட பிரைவட் லிமிடட் | 03 அமைவிடங்களில் அடுக்கு மாடி கட்டிடத் தொகுதி | உட்கட்டமைப்பு |
| 10 | கோல் பேஸ் புரொபடி பிரைவட் லிமிடட் | கொழும்பு 3 இல் கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் - ரேணுகா ஹோல்டிங் பீஎல்சீ | உட்கட்டமைப்பு |

# 04. வர்த்தக போட்டித்தன்மை

## 4.1. தேசிய வர்த்தக வசதியளித்தல் முன்னெடுப்பு

வர்த்தகம் மற்றும் தீர்வை மீதான பொது ஒப்பந்தத்தில் (1994) வர்த்தக சீராக்கல் தொடர்பான உறுப்புரைகளை தெளிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மேலும் அதன் நகர்வினைத் துரிதப்படுத்துதல் மற்றும் பயணச் சரக்குகள் உட்பட பொருட்களை விடுவித்தல் மற்றும் அனுமதித்தல் போன்ற நோக்கங்களுக்காக உலக வர்த்தக அமைப்பின் அங்கத்துவ நாடுகள் 2004 ஆகஸ்ட் 1 ஆந் திகதி இடம்பெற்ற பொதுப் பேரவையில் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக சீராக்கல் உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஏகமனதாக உடன்பட்டன. மேலும், வர்த்தக சீராக்கல் மற்றும் சுங்க தகவிணக்கப் பிரச்சினைகள் தொடர்பாக சுங்க மற்றும் அதற்கு உரிய அதிகார சபைகளிடையே வினைத்திறன்மிக்க ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு வர்த்தக சீராக்கல் உடன்படிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. மேலும் தொழில்நுட்ப உதவிக்கான ஏற்பாடுகள் மற்றும் இயலளவு விருத்தி என்பனவை அதில் உள்ளடங்குகின்றன.

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், உலக மதிப்புச் சங்கிலியில் பங்குபற்றுவதற்கான சாத்தியப்பாடுகளை அதிகரித்தல் மற்றும் தாமதங்கள் மற்றும் சூழ்ச்சி என்பவற்றுக்கான சாத்தியங்களை குறைத்தல் போன்ற குறிக்கோள்களை அடைவதற்கு வர்த்தக வசதியளித்தல் உடன்படிக்கை உதவும். மேலும் நகல்வினைத் துரிதப்படுத்தல் மற்றும் எல்லைகள் முழுவதிலும் பொருட்களை விடுவித்தல் மற்றும் அனுமதித்தல் போன்ற இலக்குகள் அடையவும் வர்த்தக சீராக்கல் உடன்படிக்கை எதிர்பார்க்கின்றது.

2018 ஆம் ஆண்டு வேகுஊ வேகுஊ யின் செயலகம் பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவைக் குழு மற்றும் அமைச்சரவை முடிவுகளின் படி ஆழனுளுஐவு வளாகத்தில் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது. வர்த்தக தகவல் வலைவாசலீ (வுஐ ீ) மற்றும் தேசிய ஒற்றை சாளரம் போன்ற கருத்திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ரூபா.325 மில்லியன் நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது. வர்த்தக வசதியளித்தல் உடன்படிக்கையின் 1.2 உறுப்புரைக்கிணங்க வர்த்தக திணைக்களம் வர்த்தக தகவல் வலைவாசலை 20.07.2018 ஆந் திகதி ஆரம்பித்து வைத்தது.

உலக வங்கியினால் ஆலோசனை செய்யப்பட்ட ஒரு தொழில்நுட்பக் குழு வர்த்தக தகவல் வலைவாசலை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. மேலும், உலக வங்கியினால் ஆலோசனை செய்யப்பட்ட தொழில்நுட்பக் குழு சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து தேசிய ஒற்றை சாளரத்திற்கான கட்டிட அமைப்பின் நிழற்பட அச்சுப்பிரதியை உருவாக்கியுள்ளது. அது தற்சமயம் உலக வங்கியின் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தி உாஷபாயமுறைகள மற்றும் சர்வதேச வர்தத்க அமைச்சு இந்த தொழில்நுட்பக் குழுக்கான அலுவலக வளாகம், அலுவலகல இடத்திற்கான செலவுகள் உட்பட வேகுஊ செயலகத்தின் நிர்வாகச் செலவுகளையும் வர்த்தக தகவல் வலைவாசல் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான செலவுகளையும் கருத்திட்டத்திற்கான ஒதுக்கீடுகளிலிருந்து வழங்குகின்றது.

தேசிய வரத்தக வசதிப்படுத்தல் குழு செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018 இன் போதான வர்த்தக வசதிப்படுத்தல் முயற்சிகளின் அமுலாக்க முன்னேற்றம் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 1: வரத்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை அமுலாக்க நடைமுறை- பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள்

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| இலங்கை சுங்கம் | 1.1 வெளியீடு | | 31/12/2019 | |
| | வெளியீட்டிற்காக நியமிக்கப்பட்ட ஆளணி ஆட்சேர்ப்பு/ கடமைகளை ஒப்படைத்தல் (தகவல் உத்தியோகத்தர்கள்/ மொழிபெயர்ப்பாளர்கள்) | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | 1.2 இணையத்தினூடாக கிடைக்ககூடிய தகவல்கள் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2019 | |
| | ளுடுஊ வர்த்தக தகவல் வலைவாசலுடன் இணைக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | ளுடுஊ இணையத் தளத்திலே ளுடுவுஜ இற்கான இணைப்பை உள்ளடக்கியிருத் தல் |
| | தகவல் புதுப்பித்தல் மற்றும் இணையதளத்தை பராமரிப்பதற்காக நியமிக்கப்பட்ட (தகவல் உத்தியோகத்தர்கள்) ஆளணியை ஒதுக்குதல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | 7.1 வருகைக்கு முந்திய செயன்முறை | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2018 | |
| | சுங்கவரிக் கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடுகளை உள்ளடக்குதல், கட்டணங்களை இலத்திரனியலூடாக செலுத்துவதனை இயலுமாக்கல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | 7.6 சராசரி வெளியீட்டு நேரங்கள் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2019 | |
| | நேர வெளியீட்டு ஆய்வினை மேற்கொள்வதற்காக போதியளவு தகுதிபெற்ற ஆளணியை ஒதுக்குதல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | நேர வெளியீட்டு ஆய்வின் வடிவமைப்பு, செயற்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆளணியை பயிற்றுவித்தல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | இலங்கை சுங்கம் மற்றும் ஐவுஊ யினால் ஏற்பாடு செய்யப்பட்ட நேர வெளியீட்டு ஆய்வின் தொடர்பான செயலமர்வு றுஊழு இன் திறமைபெற்ற பயிற்றுவிப்பாளர்க ளால் 2018 செப்தெம்பர் 25 முதல் 28 வரை நடாத்தப்பட்டது. நேர வெளியீட்டு |

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | | | ஆய்வு 2018 நவம்பர் 26 முதல் டிசெம்பர் 20 வரை நடைபெறும். |
| இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை | **1.2** .இணையத்தினூடாக கிடைக்கக் கூடிய தகவல்கள் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2019 | |
| | உறுப்புரை 1.2 இல் நிரல்படுத்தப்பட்ட தகவல் விபரங்களை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் இணையதளத்தில் வெளியிடுதல் மற்றும் புதிப்பித்தல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| ஸ்ரீ லங்கன் கார்கோ | **1.1** வெளியீடு | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2019 | |
| | எமது நியம செயற்பாட்டு விதிமுறைகள் மற்றும் கையேடுகளில் இருந்து அவசியமான தகவல்களை திரட்டுதல் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி விநியோகம் தொடர்பான விதிமுறைகளை எளிதாக்குதல், விமானம் தொடர்பான கடின வாசகங்களைத் தவிர்த்தல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | மேலும் ஆளுளு, கட்டணங்கள் மற்றும் வெட்டு நேரப்படுத்துதலும் இந்த ஆவணத்திற்கு சேர்க்கப்பட்டுள்ளது. |
| | உள்ளக குழுவொன்றை நியமித்தல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | 2.1 கருத்து தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் அமுல்படுத்துவதற்கு முன்னரான தகவல்கள், | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 30/03/2020 | |
| | கருத்து தெரிவிப்பதற்காக சந்தர்ப்பம், நடைமுறைக்கு உட்படுத்துவதற்கு முன் தகவல்கள் (சட்டமியற்றுதல் மற்றும் நிர்வாக விதிமுறைகள்)- | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | **6.1** ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் தொடர்பான அல்லது கட்டணங்கள் மீதான பொதுவான ஒழுங்கு முறைகள் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2022 | |
| | கட்டணங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் காலத்துக்குக் காலம் அவற்றை திருத்தியமைத்தல் (பொதுவாக 24 மாதங்களுக்கு ஒருமுறை) ஒருமாதம் முற்கூட்டி அதனை வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | கட்டணங்கள் தானாகவே உருவாக்கப்படுதல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
| --- | --- | --- | --- | --- |
| | 7.2 இலத்திரனியல் ஊடாக கட்டணம் செலுத்துதல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2019 | |
| | இலத்திரனியல் ஊடாக கட்டணம் செலுத்துதல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | டுயமெயியல |
| வர்த்தக, முதலீட்டு கொள்கை திணைக்களம | 1.1 வெளியீடு | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2019 | |
| | வெளியிடுதலுக்காக நியமிக்கப்பட்ட ஆளணியை ஆட்சேர்த்தல் கடமைகளை ஒப்படைத்தல்(தகவல் உத்தியோகத்தர்கள், மொழி பெயர்ப்பாளர்கள்) மொழி பெயர்ப்பாளர்களின் சேவைகளை வெளிவளப்படுத்துதல்.'. நிதியமைச்சின் மொழிபெயர்ப்பாளர் குழாமின் மொழிபெயர்ப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | அனைத்து வெளியீடுகளையும் உள்ளூர் மொழிகளுக்கு மொழி பெயர்ப்புச் செய்தல் (தமிழ் மற்றும் சிங்களம்) | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | | |
| | 1.2 இணையத்தினூடாக கிடைக்கக் கூடிய தகவல்கள் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 31/12/2019 | |
| | தகவல்களைப் புதுப்பித்தல் மற்றும் இணையதளத்தைப் பராமரித்தல போன்றனவற்றிற்காக நியமிக்கப்பட்ட ஆளணியை நியமித்தல் (தகவல் உத்தியோகத்தர்கள், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்) | | | |
| | **2.1 கருத்துத் தெரிவிப்பதற்கான வாய்ப்பும் அமுல்படுத்தலுக்கு முன்னரான தகவல்களும்** | | | |
| | வர்த்தகத்துடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளை உறுப்புரை 2.1 இன் ஏற்பாடுகளுக்கேற்ப அமுல்படுத்துவதற்கு முன்னர் அவற்றை நியாயமான கால வரையறுக்குள் வெளியிடுவதற்கு இயலுமான விதத்தில் ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்துதல். | பூர்த்தி செய்யப்பட்டது | | ஒரு சில விடயங்கள் தொடர்பாக வர்த்தகத்துடன் தொடர்புடைய சட்டங்கள்/ ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கு முன்பு அவை ஊடக வெளியினூடாக அறிவிக்கப்படும். (உதா: வாகன உமிழ்வு தராதரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் கூடிய மோட்டார் வாகனங்களின் இறக்குமதி தொடர்பான |

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
| --- | --- | --- | --- | --- |
| | | | | சட்டங்களும் ஒழுங்கு விதிகளும். வரவு செலவுத்திட்ட முன்மொழிவு இல. 10 உடன் இணைந்த 2018 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட உரையின் தொழிநுட்ப குறிப்பு இல. 15 மற்றும் 16 ஏலவே அறிவிக்கப்பட்டுள்ளது.) |
| | புதிய/ திருத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் அவற்றை வெளியிடுதல். | | | |
| | முன்மொழியப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான குறிப்புக்கள் மற்றும் பொது மக்கள் கருத்துக்களை நிர்வகிக்கும் பொறுப்பினை ஆளணிக்கு பொறுப்பு சாட்டுதல். | பூர்த்தி செய்யப்பட்டது | | ஒரு சில விடயங்கள் தொடர்பாக வர்த்தகத்துடன் தொடர்புடைய சட்டங்கள்/ ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கு முன்பு அவை ஊடக வெளியினூடாக அறிவிக்கப்படும். |
| இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களம் | **1.1 வெளியீடு** | | 31/12/2019 | |
| | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டம் மற்றும் வழிகாட்டல்களின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்குவிதிகளை வெளியிடுதலும் ஏனைய நடவடிக்கைகளை உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பிரசுரித்தலும். | பூர்த்தி செய்யப்பட்டது. | | |
| | தற்போதிருக்கின்ற முறைமையை மேம்படுத்துவதற்கு அதில் ஒரு சில மாற்றங்களை மேற்கொள்ளல். புதிய முறைமைக்கும் புதிய வலைத்தளத்துக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறையினை விருத்தி செய்தல். | பூர்த்தி செய்யப்பட்டது. | | |
| | வெளியீட்டுக்கென நியமிக்கப்பட்ட ஆளணியினை (தகவல் உத்தியோகத்தர், | பூர்த்தி செய்யப்பட்டது. | | |

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | மொழிபெயர்ப்பாளர்) ஆட்சேர்த்தல்.'. நியமித்தல் | | | |
| | **1.2 இணையத்தில் கிடைத்தக்க தகவல்கள்** | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | இணையத்தினூடான அபிவிருத்தி செயன்முறைகள் மற்றும் வெளியீடு | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | புதிய உத்தியோகபூர்வ வலைத்தளத்தை தொடங்கி வைத்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | வெளியிடுதலும் தகவல்களை இற்றைப்படுத்தலும். | பூர்த்தி செய்யப்பட்டது | | நாளாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றது |
| | **7.2 இலத்திரனியல் கொடுப்பனவு** | | | |
| | நிகழ்நிலை அனுமதிப்பத்திர விண்ணப்பத்தினை தொடங்கி வைத்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| வர்தத்க திணைக்களம் | **1.1 வெளியீடு** | | | |
| | தோற்றுச் சான்றிதழ்களை வழங்குவதற்கான செயன்முறைகளை திட்டமிடுதல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | தெளிவாக குறித்துரைக்கப்பட்ட தகவல் விநியோக பொறிமுறைகளுடன் உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்காக நிர்வாக செயன்முறைகள் மற்றும் நடவடிக்கைகளை விருத்திசெய்தல். (தகவல்கள் வகை, வெளியீட்டு முறை, திரட்டுதல், தொகுத்தல், மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தல் போன்றவற்றை திரட்டுவதற்கான நடவடிக்கைகள் ) | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | வெளியீட்டுக்கென நியமிக்கப்பட்ட ஆளணியினை (தகவல் உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பாளர்) ஆட்சேர்த்தல்/ நியமித்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | சகல ஆவணங்களையும் உள்நாட்டு மொழிகளுக்கு மொழிபெயர்த்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | ஆவணங்கள் வலைத்தளத்தில் மூன்று மொழிகளிலும் கிடைக்கும். இலங்கை வர்த்தக வலைவாசல் தொடர்ந்து மூன்று மொழிகளிலும் |

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | | | மொழிபெயர்க்கப் படும். |
| | தோற்றுச் சான்றிதழ், அடிப்படை விதிகள், கட்டணங்கள், வர்த்தக உடன்படிக்கைகள், தீர்வை ஒதுக்கீடுகள் உள்ளடங்கலாக உறுப்புரை 1.1 இன் கீழ் பட்டியலிட்டுள்ள உரிய தகவல்களை வெளியிடுதல். | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | **1.2 இணையத்தில் கிடைத்தக்க தகவல்கள்** | | | |
| | வர்த்தக தகவல் வலைவாசல் (TIP) நிறுவுதல். (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மாற்றி ஏற்றல் என்பவற்றுடன் தொடர்புடைய சகல ஒழுங்குபடுத்தப்பட்ட வர்த்தக தகவல்களும் இவ்வலைத்தளத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்) | பூர்த்தி செய்யப்பட்டது | | இலங்கை வர்த்தக தகவல் வலைவாசல் 2018 ஜுலை 20 ஆந் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. |
| | இணையத்தளத்தில் வெளியிடுவது தொடர்பான நடவடிக்கைகளை விருத்தி செய்தல் (வலைத்தளங்கள்) | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | வலைத்தளத்தை கட்டுப்படுத்துவதற்கும் வர்த்தக தகவல் நுழைவாயிலுடன் தொடர்புபடுத்தவும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை நிறுவுதல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | திணைக்களத்தின் வலைதளத்தை சீரமைத்தல் (பயனர் தோழமையை அதிகரித்தலும், தகவல்களை இற்றைப்படுத்தலும்) | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | ஆவணத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழித்தெரிவுகளை முழுமையாக தொழிற்பட வைத்தல்<br>வலைத்தளம்.<br>http://www.doc.gov.lk | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | தகவல்களை இற்றைப்படுத்தவும் வலைத்தளத்தை பரிபாலிக்கவும் நியமிக்கப்பட்ட ஆளணியினை (தகவல் உத்தியோகத்தர், தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்) ஆட்சேர்த்தல்/ நியமித்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | உறுப்புரை 1.2 இன் கீழ் பட்டியலிட்டுள்ள தோற்றுச் சான்றிதழ்கள், படிவங்கள் மற்றும் ஆவணங்கள், மேன்முறையீடு அல்லது மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய உரிய தகவல்கள் | பூர்த்தி செய்யப்பட்டது | | |

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தொடர்பாக பூர்த்தியான இற்றைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை வெளியிடுதல். | | | |
| | **1.3 விசாரணை அலகுகள்** | | 31/12/2019 | |
| | விசாரணை அலகு ஆளயினால் பயன்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் தகவல் சாதனங்களை விருத்தி செய்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | **6.1 இறக்குமதி மற்றும் ஏற்றுமதியுடன் தொடர்பாக அல்லது அவற்றின் மீது விதிக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக பொது விதிகள்** | | | |
| | புதிய அல்லது திருத்தப்பட்ட கட்டணங்கள் அமுலுக்கு வரமுன்னர் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை நிறுவுதல் | பூர்த்தி செய்யப்பட்டது | 31/12/2019 | |
| | கட்டணங்களின் கணிப்பு மற்றும் பொருந்துகை என்பவறை இயந்திரமயமாக்கல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | **7.2 இலத்திரனியல் கொடுப்பனவு** | | 31/12/2019 | |
| | இலத்திரனியல் கொடுப்பனவு முறைப் பயன்பாட்டுக்கான நடவடிக்கைகளை விருத்திசெய்து வெளியிடுதல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | இலத்திரனியல் கொடுப்பனவு பிரதேசத்தை நிறுவுதல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | **10.2 பிரதிகளை ஏற்றுக்கொள்ளல்** | | 31/12/2019 | |
| | ஆதரவு ஆவணங்களின் தாள்கள் அல்லது இலத்திரனியல் பிரதிகளை ஏற்றுக்கொள்வதற்கு தேவைப்படுகின்ற நடவடிக்கைகளை விருத்திசெய்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | ஆதரவு ஆவணங்களின் தாள்கள் அல்லது இலத்திரனியல் பிரதிகளை ஏற்றுக்கொள்வதற்காக தேவையான ஐவுஊ உட்கட்டமைப்பினை நிறுவுதல் | பூர்த்தி செய்யப்பட்டது | | |
| | **10.4 தனிச் சாளரம்** | | 31/12/2022 | |
| | ளேறு இன் மூலவரைபடத்தினை தயாரித்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | | கருத்திட்ட முகாமைத்துவ குழுவினால் உலக வங்கியின் மீளாய்வுடன் ளேறு இன் மூலவரைபடத்தி |

| முகவர் | செயற்பாடு | நிலை | இலக்குத் திகதி | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | | | ன் தயாரிப்பு பணி 2018 ஜுலை 31 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட்டது. |

## 4.2 மிகவும் ஆழமான வர்த்தக நடவடிக்கைளுக்குள் நுழைதல்

அரசாங்கத்தின் புதிய வர்த்தக கொள்கையானது ஏற்றுமதி நோக்கிலான நேரடி முதலீட்டினை கவரக்கூடிய, வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்தக்கூடிய, உலக சந்தைகளில் போட்டியிடும் விதத்தில் நிறுவனங்களின் இயற்றிறனை அதிகரிக்கக்கூடிய அதிகளவில் தாராளமயமாக்கப்பட்ட, சாதாரண, வெளிப்படைத்தன்மை மிகு மற்றும் எதிர்வுகூறத்தக்க வர்த்த பரிபாலண முறையை திட்டமிடுகின்றது. மேலும், அக்கொள்கை இருதரப்பு, பிராந்திய மற்றும் பன்னாட்டு மட்டங்களிலுள்ள உபாயமுறைகள்பங்காளர்களுடன் ஆழமான ஈடுபடுதல்களுக்கு ஆதரவளிக்கின்றது.

அத்தகைய ஆழமான ஈடுபாடுகள் இலங்கையை உலகளாவிய மதிப்பு சங்கிலிக்குள் கொண்டுசெல்வதுடன், ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்தி அதனை விரிவாக்குவதுடன், உகந்த பேச்சுவார்த்தை குறிப்பீட்டு நியதிகளினூடாக நாட்டுக்கு போட்டித்தறினுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கின்றன. இதன் பின்னணியில், தற்போது இலங்கை இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் மிக ஆழமான விரிவான வர்த்தக கலந்துரையாடல்களை நடத்துகின்றது.




18 மாத பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2018.01.23 ஆந் திகதி கைச்சாதிடப்பட்டதுடன் 2018.05.01 ஆந் திகதி அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இலங்கையின் முதலாவது விரிவான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையாகவும் உபகண்டமல்லாத வர்த்தக பங்காளருடனான முதலாவது இருதலைப்பட்ச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையுமாகும். அவ்வாறே, இலங்கை 16 வருடங்களுக்கு பின்னர் கைச்சாத்திட்ட முதலாவது சுதந்திர வர்த்தக உடன்படிக்கையுமாகும்.

| வர்த்தக பேச்சுவார்த்தைகள் 2016 – 2018 | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்கப்பூர் | 2016 ஆகஸ்ட் 15 மற்றும் 16 ((முதல் சுற்று) | 2016 ஒக்டோபர் 21 (2வது சுற்று) | 2016 டிசம்பர் 13 – 15 (3வது சுற்று) | 2017 பெப்ரவரி 16-17 (4வது சுற்று) | 2017 ஏப்ரல் 06-07 (5வது சுற்று) | 2017 ஜுலை 24-25 (6வது சுற்று) | 2017 ஒக்டோபர் 16-18 (7வது சுற்று) | 2017 நவம்பர் 13-14 (8வது சுற்று) | 2018 ஜனவரி 23 இலங்கையில் குவுயு கைச்சாத்திடல் | | |
| சீனா | 2016 ஆகஸ்ட் 2-4 (3வது சுற்று | 2016 நவம்பர் 21-23 (4வது சுற்று) | 2017 ஜனவரி 17-19 (5வது சுற்று) | 2017 மார்ச் 20-22 (6வது சுற்று) | | | | | | | |
| இந்தியா | 2016 ஆகஸ்ட் 9-10 (1வது சுற்று) | 2016 செப்தம்பர் 29-30 (2வது சுற்று) | 2017 ஜனவரி 04-05 (3வது சுற்று) | 2017 ஏப்ரல் 24-26 (4வது சுற்று) | 2017 ஆகஸ்'ட் 16-18 (5வது சுற்று) | 2017 ஒக்டோபர் 04-06 (6வது சுற்று) | 2017 டிசம்பர் 18-20 (7வது சுற்று) | 2018 பெப்ரவரி 21-23 (8வது சுற்று) | 2018 மே 23-25 (9வது சுற்று) | 2018 ஆகஸ்ட் 2-4 (10வது சுற்று) | 2018 ஆகஸ்ட் 23-24 (11வது சுற்று) |
| தாய்லாந்து | 2018 ஜுலை 13 (1வது சுற்று) | 2018 செப்தம்பர் 19-21 (2வது சுற்று | | | | | | | | | |

## ➢ இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLSFTA)



### குறிக்கோள்

ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 400 பில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தைக்கு ஊடுருவுவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களை கவர்ந்து கொள்வதற்கும், வர்த்தகத்தில் சர்வதேசரீதியான சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும், பொருளாதார அபிவிருத்தியின் நிலைபேற்றுக்கு உயர் தரம் மற்றும் நியாயமான கிரயத்துடன் அவசியமான இறக்குமதிகளுக்கு வளமூட்டுவதற்கும் ஆகும்.

### பெறுபேறு

2022 ஆம் ஆண்டில் (இரட்டிப்பாக்கப்பட்ட) உள்வரும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், சிங்கப்பூருக்கான பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி.

இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பிரதான குறிக்கோள் முதலீட்டை கவர்தல் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை இலகுபடுத்துதல் என்பனவாகும். சிங்கப்பூர் நாட்டுடன் ஒரு விரிவான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இருப்பதன் மூலம், இலங்கைக்குள் ஏற்கனவே ஒரு முக்கிய முதலீட்டு வளம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதோடு நாட்டுக்குள் முதலீடுகளுக்கான மிகவும் வெளிப்படையான தன்மை மற்றும் எதிர்வு கூறக்கூடிய தன்மை என்பவற்றை வழங்குவதற்கு சாத்தியமாக இருக்கும். சிங்கப்பூர் நாட்டிலிருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள், இலங்கை ஏற்கனவே வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டிருக்கின்ற (இந்தியா மற்றும் பாகிஸ்தான்) வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கு இலங்கையை ஒரு தலமாகப்

பயன்படுத்த முடியும் என்பதோடு இலங்கை (சீனா மற்றும் தாய்லாந்து) ஏனைய நாடுகளுடன் புதிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றது. அதே போன்று, பிராந்தியத்தில் மிகவும் உயர்வான நாடுகளில் ஒன்றுடன் ஒரு விரிவான சுதந்திர வர்த்தக வலய உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதன் மூலம் இலங்கை நாடும் சர்வதேச பொருளாதாரத்துடன் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அர்த்தமுள்ள ஈடுபாடு என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்றது என்ற உறுதியான செய்தியை உலக வர்த்தகத் துறைக்கு அனுப்புகின்றது.

இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 17 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது என்பதோடு அது அடிப்படையாக பொருட்கள் பரிமாற்றம், சேவைகள், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துக்கான சுகாதார மற்றும் பைடோ- சுகாதார அளவீடுகள் மற்றும் தொழிநுட்ப தடைகள், வர்த்தக பரிகாரங்கள் மற்றும் பிணக்கு தீர்த்தல், சுங்கங்களின் ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக வசதியளிப்பு, பொருளதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு, அரசாங்க பொருட் பெறுகை, இ-வர்த்தகம் மற்றும் புலமைச் சொத்து ஆதன உரிமைகள் என்பனவாகும்.

பொருட்கள் வர்த்தகத்தில் 15 வருடங்களில் 4 கட்டங்களில் அதன் கட்டண வரிசைகளின் 80மூ சதவீதத்தை தாராளமயமாக்குவதற்கு இலங்கை பொறுப்பேற்றுள்ளது. அதன் முதலாம் கட்டத்தில், சில பொருட்களுக்கு ஏற்கனவே வரி நீக்கப்பட்ட பொருட்கள் தவிர்ந்த, இலங்கையின் கட்டண வரிசைகள் 50மூ (3,719) தாராளமயமாக்கப்பட்டது. அதன் விளைவாக, வருமானத்தில் அல்லது உள்நாட்டு கைத்தொழில்கள் மீது எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டாது. ஏனைய கட்டணக் குறைப்பு மற்றும் நீக்கல்கள் படிப்படையான படிமுறையொன்றில் மேற்கொள்ளப்படும், அதாவது 15மூ சதவீத கட்டண வரிசைகள் (1116 பொருட்கள்) 1 முதல் 6 வருடங்களில் சமமான தவணைகளிலும், அடுத்த 14.3மூ சதவீத கட்டண வரிசைகள் (1064 பொருட்கள்) 7 முதல் 12 வருட சமமான தவணைகளிலும் மற்றும் 07மூ சதவீத (51 பொருட்கள்) 11 முதல் 15 வருடத்தில் மேற்கொள்ளப்படும். ஆரம்ப பொருள் தகுதிவிதியின் சட்டவிதிகளின் கீழ் பொதுவாக சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செயயப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள், சிங்கப்பூர் நாட்டில் நான்கு இலக்க மட்டத்தில் இடம்பெறுகின்ற 35மூ சதவீத பெறுமதி சேர்த்தல் அல்லது கட்டணத் தலைப்பில் மாற்றம் ஏற்படாத வரை கட்டண சலுகைகளுக்காக தகுதி பெறமாட்டாது. சிங்கப்பூர் நாட்டில் ஆகக் குறைந்த பெறுமதி சேர்ப்பு அல்லது செயன்முறை அவசியமாக இடம்பெற வேண்டுமென்பதால், துறைமுகத்தில் இறக்கி ஏற்றுமதி செய்தல் ஊடாக ஏற்றமதி செய்யப்படுகின்ற வர்த்தகம் சாதாரணமாக உடன்படிக்கையில் மூல சட்டவிதிகள் அனுமதிப்பதில்லை. அதேபோன்று, தரநியமங்கள், சுகாதார மற்றும் பைடோ-சுகாதார அளவீடுகள், சிக்கலான நடைமுறைகள் போன்ற பொருட்கள் வர்த்தகத்தில் கட்டணம் இல்லாத தடைகளை செயற்திறனாகத் தீர்ப்பதற்கு, சுகாதார மற்றும் பைடோ- சுகாதார அளவீடுகள், வர்த்தகத்துக்கான தொழிநுட்ப தடைகள் மற்றும் சுங்க நடைமுறைகள் மறறும் வர்த்தக வசதியளிப்பு என்பவை தொடர்பில் விரிவான அத்தியாயங்களை உள்ளடக்குகின்றது.. மேலும், தாராளமயமாக்கல் ஊடாக உள்நாட்டு கைத்தொழில் துறைகளுக்கு ஏற்படக் கூடிய பாரதூரமான பாதிப்புக்கள் வர்த்தகப் பரிகாரங்கள் தொடர்பான அத்தியாயத்தினூடாக செயற்றிறனாக பாதுகாக்கப்படும்.

சேவைகள் வர்த்தகப் பிரிவில், சாத்தியமான பட்டியல் அடிப்படையில் அத்தியாயம் கலந்துரையாடியுள்ளது என்பதோடு இதில் தாராளமயமாக்களின் எல்லை, தடைகளின் மட்டம், மற்றும் இலங்கை அர்ப்பணிப்புக்களைச் செய்வதற்கு தெரிவு செய்கின்ற துறைகளில் சிங்கப்பூர் சேவைகள் வழங்களுக்கான ஏதேனும் ஏனைய நிபந்தனைகள் என்பவற்றை இலங்கை விபரித்துள்ளது. சேவைகள் அத்தியாயத்தில் சிங்கப்பூருக்கான இலங்கையின் சேவை வழங்கள் விடயத்தில், நாணயக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள், முதலீட்டு ஒழுங்கு விதிகள், குடிவரவு ஒழுங்குவிதிகள் என்பவற்றில் விபரிக்கப்பட்டவாறு ஒரு பக்க அரச உடன்படிக்கை ஊடாக ஏற்கனவே உள்ளவற்றுக்கு அப்பால் புதிய தாராளமயமாக்கல் எதும் சேர்க்கப்படவில்லை. பட்டியலிடப்பட்ட துறைகளில் அர்ப்பணிப்பு, வெளிப்படைத் தன்மை, மற்றும் தாராளமயமாக்களின் மட்டத்தின் உறுதிப்படுத்தல் என்பவற்றை வழங்குதல் அத்தியாயத்தின் பிரதான குறிக்கோளாகும். இலங்கைக்கான சிங்கப்பூரின் விருப்பறிவிப்புக்களைக் கருத்தில் கொள்கின்ற போது, இலங்கையினால் வழங்கப்படுகின்ற சேவைத் துறைகளைவிடவும் பல்வேறு வகையான சேவைத் துறைகளை சிங்கப்பூரின் அர்ப்பணிப்புக்கள் உள்ள்டக்குகின்றன என்பதோடு இலங்கை சிங்கப்பூருக்கு வழங்குவதைவிடவும் குறிப்பாக மிகவும் ஆழமான மற்றும் பலவேறு விடயங்களை உள்ளடக்கிய வர்த்தக சேவைகளை சிங்கப்பூர் இலங்கைக்கு வழங்குகின்றது.

இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முதலீட்டு அத்தியாயம் சிங்கப்பூர் முதலீட்டாளர்களுக்கும் மற்றும் அவர்களின் முதலீடுகளுக்கும் போதிய பாதுகாப்பை வழங்குகின்றது என்பதோடு அதன் மூலம் இலங்கைக்கு முதலீடுகளை ஊக்குவிக்கின்றது. இவைகள் உபசரிப்பு, தேசிய உபசரிப்பு, எம்எப்என் (ஆகுே), இழப்புக்களுக்கான நட்டஈடு, செயலாற்றுகைத் தேவைப்பாடுகள், சிரேஷ்ட முகாமை மற்றும் பணிப்பாளர் சபை, தகவல் உபசரிப்பு, கையகப்படுத்துதல், இடமாற்றல்கள் மற்றும் சுமுகமாக்குதல் என்பவற்றின் ஆகக் குறைந்த தரநியமங்களை உட்படுகின்றது. இந்த அத்தியாயம் மேலும் சிங்கப்பூர் நாட்டில் இல்லாத உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு∴முதலீடுகளுக்கு வழங்கப்படுகின்ற மானியங்கள் மற்றும் உதவு தொகைகள் போன்ற தேசிய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக அரச முதலீடுகளை ஒழுங்குறுத்துவதற்கு அரசுக்கான அவசியமான நெகிழ்வுத் தன்மையையும் வழங்குகின்றது என்பதோடு மறைமுக ஒதுக்கலுக்கான தொகைகள் இல்லாத வரை, வரி அளவீடுகள் சேர்க்கப்படுவதில்லை. நடுத்தீர்ப்பு கிரயங்களை குறைப்பதற்கும் மற்றும் மூலதன ஏற்றுமதியாளர்களை நோக்கிய ஏதேனும் அசாதாரண சலுகைகளுக்கு எதிரான பாதுகாப்பு நோக்கத்துக்காகவும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் முதலீட்டாளர்-அரசு இலங்கையின் நிலவுகின்ற இருபக்க முதலீட்டு உடன்படிக்கைகளுடன் ஒப்பிடுகின்ற போது, பிணக்குத் தீர்வு செயன்முறை தொடர்பில் சட்டத்துக்கு கூட்டிணைப்புச் செய்யப்பட்ட சில விலகல்களை உள்ளடக்கியிருக்கின்றது.

மேலும், அரச பொருள் பெறுகை அத்தியாயம் அரசுகளின் பொருள்பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்குகின்றது என்பதோடு வெளிப்படையான தன்மை மற்றும் படிமுறை நியாயம் தொடர்பில் அநேக ஏற்பாடுகளை உட்படுத்துகின்றது. மேலும் இ-வர்த்தகம் அத்தியாயமானது இலத்திரனியல் முறைகளில் இரண்டு நாடுகளாலும் செயற்படுத்தப்படுகின்ற வர்த்தகத்தினால் பராமரிக்கப்படுகின்ற நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது என்பதோடு அது பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் இலத்திரனியல் வணிகம், இலத்திரனியல் வணிகத்தில் நுகர்வோர் நம்பிக்கையின் ஊக்குவிப்பு மற்றும் இ-வணிகத்தைப் பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற தடைகளைத் தவிர்ப்பதற்கும் வாய்ப்புக்களை வழங்குகின்றது. தொலைத் தொடர்பாடல் சேவைகள் வர்த்தகத்தில் பயனுறுத்துகின்ற நடவடிக்கைகளுக்கு தொலைத்தொடர்பாடல் அத்தியாயம் பிரயோகமாகின்றது என்பதோடு துறையில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளைக் கடைபிடிக்கப்படுவதனை உறுதி செய்கின்றது. அதே போன்று புலமைச் சொத்து உரிமைகள் அத்தியாயமானது, துறையில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளை கடைபிடிப்பதனை உறுதி செய்வதன் மூலம் இரு நாடுகளும் தரப்பினர்களாக இருக்கின்ற புலமைச் சொத்து துறையில் வுசுஜீளு உடன்படிக்கை மற்றும் ஏனைய சர்வதேச உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழ் ஏற்பாடுகளை பூர்த்தி செய்கின்றது.

அத்தோடு, நிறுவன ரீதியான, பொது மற்றும் இறுதி ஏற்பாடுகள் என்பவற்றுக்கான அத்தியாயம், உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கான நெகிழ்வுத் தன்மையான சட்டவரையை வழங்குகின்றது. இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் உடன்படிக்கையின் சுமுகமான செயற்பாட்டை உறுதி செய்வதற்கு கூட்டாக குழுவொன்று நியமிக்கப்படும். அதே போன்று, சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஒரு விரிவான பிணக்கு தீர்த்தல் பொறிமுறையையும் கொண்டுள்ளது.

## ➢ இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (ETCA)

### நோக்கம்

400 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட மதிப்புடைய பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தையை வினைத்திறனாக ஊடுருவி, வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்த்தலும், பொருளாதார அபிவிருத்தியை பேணும் வகையில் குறைந்தபட்ச செலவில் இருந்து தேவையான இறக்குமதிக்கு வழியமைத்தலும்.

### விளைவு

2022 ஆம் ஆண்டளவில் இந்தியாவில் இருந்து இரட்டிப்பான பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி, வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வருகை.

இந்தியா இலங்கையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி சந்தையாகவும் மிகப்பெரிய இறக்குமதி மூலமாகவும் விளங்குகிறது. 2017 ஆம் ஆண்டில் இந்தியா இலங்கை இறக்குமதியில் 21 வீதத்தையும் இலங்கை ஏற்றுமதியில் 7 வீதத்தையும் கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தியாவுக்கான இலங்கை ஏற்றுமதி 10 மடங்கு அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் மொத்த ஏற்றுமதிகள் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளன. இந்த அடைவுகள் முக்கியமாக இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் காரணத்தினாலேயாகும். இவ்வுடன்படிக்கை இப்போது 15 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இருந்து வருகிறது. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் சலுகைகள் இந்தியாவுக்கான இலங்கை ஏற்றுமதியின் 80 வீதத்தையும் இலங்கைக்கான மொத்த இந்திய இறக்குமதிகளில் சுமார் 65 வீதத்தையும் உள்ளடக்குகின்றது. மேலும், இந்தியா கைச்சாத்திட்டுள்ள ஏனைய அனைத்து இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுடன் ஒப்பிடுகையில் இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் இந்தியா அதிகளவு வரிவிலக்கை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

மேலும், இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இரு நாடுகளுக்கும் சில மேலதிக நன்மைகளையும் வழங்கியுள்ளது. முதலாவதாக, இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு பாய்ச்சல்கள் கடந்த தசாப்தத்தில் கணிசமாக அதிகரித்துள்ளன. இலங்கையில் இந்தியாவின் மொத்த முதலீடு சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ள அதேநேரம், இந்தியாவில் இலங்கையின் மொத்த முதலீடு சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது. இரண்டாவதாக, இரு நாடுகளுக்கும் இடையிலான சேவைகள் கடந்த பத்து வருட காலப் பகுதியில் அதிகரித்து வந்துள்ளன. உதாரணமாக, இலங்கையின் மிகப்பெரிய சுற்றுலா வழங்குநராக இந்தியா திகழ்கின்ற அதே நேரம், இந்தியாவுக்கான ஆறாவது மிகப்பெரிய சுற்றுலா வழங்குனராக இலங்கை திகழ்கின்றது.

இந்த சாதகமான அடைவுகளானது 2015 ஆம் ஆண்டில் இரு அரசாங்கங்களினாலும் பரிந்துரைக்கப்பட்ட பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (நுவுஊயு) அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதாகும்.

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு நுவுஊயு பல்வேறு அம்சங்களில் பொருளாதார நலன்களை கொண்டுவரும் நோக்கத்தை கொண்டுள்ளது. இதேபோல், நுவுஊயு இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார சமச்சீரின்மையை அங்கீகரிப்பதுடன், அது பொருத்தமான நெகிழ்வுத்தன்மை ஏற்பாடுகளின் ஊடாக தீர்க்கப்படவுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள நுவுஊயு பொருட்கள், சேவைகள், முதலீட்டு ஊக்குவிப்பு, சுகாதாரம் வசதிகள் - சுகாதார (ளீளு) நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகத்திற்கான தொழிநுட்பத் தடைகள், வர்த்தக தீர்வுகள் மற்றும் பிணக்குத் தீர்வு, சுங்க கூட்டுறவு மற்றும் வர்த்தக உதவிகள், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகிய வர்த்தகத் துறைகளை அடிப்படையில் உள்ளடக்குகின்றது. தற்போது, நுவுஊயு வின் 10 சுற்று பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

நுவுஊயு வின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறை சிக்கல்களைத் தீர்ப்பதாகும். அதன்படி, ஒவ்வொரு நுவுஊயு பேச்சுவார்த்தை சுற்றிலும், இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்பான விவகாரங்களை விவாதிப்பதற்கான ஒரு அர்ப்பணிப்பு அமர்வு உள்ளது. இந்த அமர்வு நிறுவனத்தின் குறிப்பிட்ட பிரச்சினைகள், ஒதுக்கீடு மற்றும் ஆடை, மிளகு மற்றும் வனஸ்பதி ஆகியவற்றில் உள்ள நடைமுறை வரையறைகள் மீதான விவாதங்கள், ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மனக்குறைகளை தீர்க்கும் பொறிமுறையை நிறுவுதல் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

பொருட்கள் வர்த்தகம் குறித்த அத்தியாயத்தின் கீழ், இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட அர்ப்பணிப்புகள் (உரிமைகள் மற்றும் கடமைகள்) பின்னோக்கிக் கொண்டுசெல்லப்படவோ அல்லது சமரசம் செய்யப்படவோ கூடாது என்ற தனது அக்கறையை இலங்கை வெளிப்படுத்தியுள்ளதுடன், இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் உள்ள உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பில் நுவுஊயு இல் உள்ள இடைக்கால ஏற்பாடுகளை உள்ளடக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் எதிர்மறையான பட்டியல்களை மீளாய்வு செய்வதன் மூலம் கட்டணத்தை குறைத்தல் அல்லது நீக்கம் செய்யப்படுவதுடன், இந்த செயன்முறையின் போது பொருளாதார சமச்சீர் கோட்பாடு கருத்திற்கொள்ளப்படும். மேலும், இருதரப்பு வர்த்தகத்தின் தற்போதைய பிரதான தடையாக அடையாளம் காணப்பட்டுள்ள தரநிலைகள், சுகாதார நடவடிக்கைகள் உட்பட சுங்க வரி அல்லாத தடைகள் தொடர்பில் நுவுஊயு வில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள் மற்றும் நுவுஊயு இன் வர்த்தக, சுங்க நடைமுறைகள் மற்றும் வர்த்தக உதவிகள் பற்றிய அத்தியாயங்கள், இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிக்கும் வகையில் சுங்க வரி அல்லாத தடைகளை திறம்பட குறைக்கும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தும். இது சம்பந்தமாக, ஒரு உறுதியான நடவடிக்கையாக, பரஸ்பர அங்கீகார ஏற்பாடுகளுக்கான ஒரு பிரத்தியேக வழிகாட்டல் சட்டகத்தை இணைப்பதற்கு இரு தரப்பும் ஒப்புக் கொண்டன. இது இரு தரப்புகளாலும் கைக்கொள்ளப்பட்டுவரும் ஒப்புமை மதிப்பீடு நடைமுறைகளையும், பெறுபேறுகளையும் அங்கீகரிப்பதுடன், ஏற்றுமதி நலன்கள் துறைகளில் எதிர்காலத்தில் பரஸ்பர அங்கீகார ஏற்பாடுகள் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு இரு தரப்புக்கும் உதவும்.

இந்தியா அடுத்த சில ஆண்டுகளில் உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாக திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக சேவைகள் வர்த்தக விரிவாக்கத்தை குறிப்பிட முடியும். நுவுஊயு வின் மூலம், இரண்டு பொருளாதாரங்களுக்கும் இடையேயான கணிசமான சமச்சீரற்ற தன்மையை கவனத்திற்கொள்கின்ற அதேநேரம், பரஸ்பரம் உடன்பட்ட சேவைத் துறைகளில் தாராளமயமாக்கம் இடம்பெறும். தற்போது, இரு தரப்பினரும் மாற்ற, திருத்த அல்லது முற்றிலும் விலக்குவதற்கான உரிமைகளை கொண்டுள்ளதன் மூலம் அவர்களின் ஆரம்ப நிபந்தனை வாய்ப்பை பரிமாறிக்கொண்டுள்ளனர். இலங்கையின் ஆரம்பகட்ட விருப்பறிவிப்பை பொறுத்தவரையில், அரசாங்கத்தின் நிலையான கொள்கையானது, முறை 04 இன் கீழ் தனிப்பட்டவர்களின் சுதந்திரமான இயக்கம் அனுமதிக்கப்படாது, இதனால் எந்த தொழில்முறை வகைகளையும் திறக்க எந்தவொரு பொறுப்பையும் இலங்கை மேற்கொள்ளவில்லை.

2017 ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையுடனான தனது இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கைகளை முறித்துக் கொள்ளவும், மீளாய்வு செய்யவும் ஒரு கொள்கை ரீதியான தீர்மானத்தை இந்தியா எடுத்துள்ளது. அதன்படி, நுவுஊயு வின் முதலீட்டு அத்தியாயம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் முதலீட்டு பாய்ச்சலை ஊக்குவிப்பதன் மூலம் இந்த வெற்றிடத்தை பூர்த்தி செய்யும்.

விவசாயம், கல்வி மற்றும் உயர் கல்வி, சுற்றுலா, போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து, துறைமுக துறை, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி, பயிற்சி, சக்திவளம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி, விண்வெளி, வானியல், தகவல் மற்றும் ஆராய்ச்சி, விண்வெளி, வானிலையாய்வு, தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், ளுஆநு களின் ஊக்குவிப்பு மற்றும் அவற்றின் போட்டித்தன்மையை மேம்படுத்துதல் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலம், நுவுஊயு வின் நன்மைகளை அதிகரிக்கும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றியும் ஒரு அத்தியாயம் உள்ளடக்கியிருக்கும். அதேபோல், வர்த்தக ரீதியான தீர்வுகள் என்ற அத்தியாயம் தாராளமயமாக்கலின் பின்னர் கடுமையான இழப்புகளில் இருந்து உள்நாட்டு கைத்தொழில்களை பாதுகாப்பதற்கான பயனுள்ள தீர்வுகளை அறிமுகப்படுத்தும். மேலும், குவுயு தொடர்பான தகராறுகளை தீர்ப்பதற்கான ஒரு ஒருங்கிணைந்த சட்ட கட்டமைப்பை சர்ச்சைகளைத் தீர்த்தல் என்ற அத்தியாயம் வழங்கும், மேலும் இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படுவது இரு நாடுகளின் அதிகாரிகளைக் கொண்ட ஒரு இணைக் குழுவின் மூலம் கண்காணிக்கப்படும்.

## ➢ சீனா – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSLFTA)

ரூபா 2000 பில்லியன் இற்கு மேல் பெறுமதி உள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தையினுள் செயல்திறன் மிக்கவாறு உள்நுழைதல், நேரடி வெளிநாட்டு முதலீடுகளை கவர்தல், வர்த்தகத்தில் சர்வதேச சிறந்த நடத்தைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் பொருளாதர அபிவிருத்தியினை நிலைநிறுத்துவதற்கு உயர்தரமும் நியாயமான செலவிடனும் கூடிய வேண்டப்பட்ட இறக்குமதிகளை பெற்றுக்கொள்ளல் என்பனவாகும்.

சீனா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, சுமார் மேலதிகமாக ஐ.அ.டொலர் 700 மில்லியன் வர்த்தகத்தினை தோற்றுவிக்கும் எனவும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைசாத்திடப்பட்ட பின்னர் ஆடைத் துறை 400 மில்லியன் ஆல் அதிகரிக்கும் என்றும் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்காக 224 உற்பத்திகளுக்கான புதிய சீனச் சந்தை போட்டி அனுகூலங்களை வழங்கும் என்றும் மதிப்பிடப்பட்டள்ளது. முன்மொழியப்பட்ட சீனா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகள் வர்த்தகத் துறைகள், முதலீட்டு ஊக்குவிப்பு, ஆரோக்கிய மற்றும் தாவர ஆரோக்கிய ஆரோக்கிய வழிமுறைகள் மற்றும் வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப ரீதியான தடைகள், வர்த்தகப் பரிகாரங்கள், பிணக்கு தீர்த்தல் அத்துடன் பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது. பண்டங்கள் வர்த்தகத் துறையில் சீனா அவர்களது தீர்வை தளத்தில் 75மூ இற்கு பூச்சிய வீத தீர்வையை ஏற்கனவே பிரயோகித்துள்ளது. ஆயினும் செஸ் தீர்வை பிரயோகத்திற்கு உட்படும் பல எண்ணிக்கையான தீர்வை அடிப்படைகள் காணப்படுகின்றன. சீனாவிற்கான இலங்கை விருப்ப அட்டவணை 462 தீர்வை அடிப்படைகளை உள்ளடக்குகின்றது. சீனாவிற்கு அனைத்து ஏற்றுமதிகளையும் உள்ளடக்கிய இது இலங்கையின் சீனாவிற்கான ஏற்றுமதிகளின் 65மூ இற்கு மேல் கொண்டுள்ளது. சீனாவின் நிலை 6888 வர்த்தக அடிப்படைகளின் நியதிகளிலும் இருதரப்பு மூலமான வர்த்க அடிப்படையிலும் 90மூ காணப்படுவதுடன், தீர்வை அடிப்படையில் 10மூ மாத்திரம் வரிக் குறைப்பிற்கு உட்படமாட்டாது எனினும் 10 வருட காலத்திற்கு 70மூ தாராளமயமாக்கலை வைத்திருக்க இலங்கை முன்மொழிந்துள்ளதுடன், 20 ஆம் ஆண்டளவில் 90மூ இனை அடைய உடன்படத்தக்கதாகும். சீன தரப்பின் ஏற்றுக்கொள்ளல் இன்னும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளது

சேவைகள் வர்த்தகத் துறையில் மிகவும் ஆக்கபூர்வ ஆலோசனைகள் பூர்த்தி செய்யப்பட்டு இரு தரப்பும் ஆரம்ப விருப்பறிவிப்பு அட்டவணைகள் பரிமாரியுள்ளன. இவை மேலும் கலந்துரையாடல்களுக்காக திறந்துவிடப்பட்டள்ளன. சீனாவினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையானது அடிப்படையில் சேவைகளை தாராளமயமாக்குவதற்காகும். இலங்கை அதன் ஆரம்ப விருப்பறிவிப்புகளை சமர்ப்பித்தது. இது கணினி வன்பொருள் நிறுவுதலுடன் கணினிச் சேவைகள், நிதியியல் சேவைகள், இயக்குநர் உடன் கூடிய கடலில் செல்லும் கலங்களின் வாடைகைச் சேவைகள், ஏனைய போக்குவரத்து உபகரண பழுதுபார்த்தல் செலவுகள், கடல்சார் பயண கையாளுதல் இடை ஏற்பாடுகள், களஞ்சியம் பொருட் சேகரித்தல் சேவைகள் , நிருமாணத்துடன் சேவைகள், விளம்பரச் சேவைகள், தொழில்நுட்ப மற்றும் பகுப்பாய்வு சேவைகள் மற்றும் ஹோட்டல் மற்றும் உணவகச் சேவைகள், விளையாட்டு ஊக்குவித்தல், ஓய்வு அத்துடன் பூங்க கடற்கரையோர சேவைகள் என்பனவற்றை தொடர்புடைய துறைகளில் காணப்படுகின்ற பல்வேறு விதிகள் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டிருக்கின்றது. தொழில்சார் சேவைகள் என்ற ரீதியல் இலங்கை தொழில்சார் சேவைகள் உண்மைச் சொத்து சேவைகள் சீனாவின் கோரிக்கை மீது கருத்துரைகள் மேற்கொள்வது கடினமானது என சுட்டிக்காட்டியுள்ளது. சீனா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முதலீட்டு அத்தியாயமானது சீன முதலீடுகளுக்கு மிகவும் சுதந்திரமான பர்பாலனத்தையும் பாதுகாப்பையும் எதிர்வுகூறத்தக்க சூழலையும் வழங்குவதுடன், மீண்டும் கொள்வனவு செய்தல் ஒழுங்குகளுன் கூடிய இணைந்த கூட்டுமுயற்சிகளை ஊக்குவித்து சீனா ஊக்குவிப்பிற்கான சுதந்திர முதலீட்டு ஆட்சி முறையையும் வழங்கும் இம் முதலீடுகள் இடைநிலை உள்ளீடுகளின் செலவுகளை குறைப்பதன் மூலம் இம்முதலீட்டு போட்டித் தன்மையினை முன்மொழியப்பட்ட சீனா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நன்மைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும், ஏற்கனவே காணப்படும் இருதரப்பு உடன்படிக்கைகள் மூலம் வழங்கப்பட்ட உள்ளடக்கத்தினை மேலும் வழுப்படுத்துவதும் இரு பக்க முதலீடுகளுக்கு அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளடக்கம் ஒன்றும் காணப்படுவதுடன், இலங்கை ஏற்கனவே சீன முதலீட்டிற்காக ஹம்பாந்தோட்டையில் விசேட ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வளயத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அத்துடன் இவ் வலயத்தில் முதலிடுவதற்கு அதிக சீன கம்பனிகளுக்கு வசதியளிக்கின்றது.

## ➢ இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLTFTA)

### நோக்கங்கள்

பொருட்கள், சேவைகள், முதலீடுகள் மற்றும் பரஸ்பரம் இணக்கம்காணப்பட்ட எனைய துறைகளுக்கான முன்னுரிமை சந்தை வாய்ப்புகளின் ஊடாக இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துதல். தாய்லாந்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு பாய்ச்சல்களை மேலும் ஊக்குவித்து வசதியளித்தல்.

### எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

2020 ஆம் ஆண்டில் தற்போதைய இருதரப்பு வர்த்தக பெறுமதியை 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மும்மடங்காக அதிகரித்தல்
முன்மொழியப்பட்ட இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ளுடுவுகுவுயு), பொருட்கள், சேவைகள், முதலீடுகள் மற்றும் பரஸ்பரம் இணக்கம்காணப்பட்ட எனைய துறைகளுக்கான முன்னுரிமை சந்தை வாய்ப்புகளின் ஊடாக இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தும். இது தாய்லாந்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு பாய்ச்சல்களை மேலும் ஊக்குவித்து வசதியளிக்கும். பல துறைகளில் மேம்பட்ட பொருளாதார ஒத்துழைப்பு மூலம் இரு தரப்பும் அபிவிருத்தி செய்ய முடியுமான பொருளாதார ஆற்றல்களையும் பொருளாதார கட்டமைப்புகளையும் அங்கீகரித்து, 2020 ஆம் ஆண்டில் தற்போதைய இருதரப்பு வர்த்தக பெறுமதியை 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மும்மடங்காக அதிகரிப்பது ளுடுவுகுவுயு வின் இலக்காகும்.

2016 மார்ச் இல் தாய்லாந்தின் கௌரவ பிரதிப் பிரதம அமைச்சரின் வருகையின் போது இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் இருபக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றின் மீது கால் பதிப்பதற்கு உடன்பாடு ஏற்பட்டது. அதற்கமைய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, தாய்லாந்து மற்றும் இலங்கையுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தை செயன்முறையொன்றினை ஆரம்பிப்பதற்கு பரிந்துரைத்து 2017.07.05 அன்று அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றினை சமர்ப்பித்தது. அமைச்சரவையின் பணிப்புரைக்கு அமைவாக அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தையினை ஆரம்பித்தல் தொடர்பில் பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவை குழுவிற்கு பத்திரமொன்றினை சமர்ப்பித்தது. அமைச்சரவை 2018.01.16 அன்று பேச்சுவார்தையினை ஆரம்பிப்பதற்கு பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவை குழுவிற்கு அதன் ஒப்புதலை அளித்தது. உடன்படிக்கையின் கட்டமைப்பு மற்றும் நோக்கெல்லை மீதான உடன்பாட்டுக்கான மதிப்பிடுதல் அமர்வு 2018 மே 16-17 வரை கொழும்பில் நடைபெற்றது. பேச்சுவார்தைகளை கருத்திற் கொள்வதற்கான குறிக்கோள்கள், கோட்பாடுகள், நோக்கெல்லை மற்றும் நோக்கெல்லை விவரணம், கட்டமைப்பு மற்றும் ஏற்பாட்டு ஒழுங்குகளை எடுத்துரைக்கின்ற மதிப்பீட்டு அவணத்தை தரப்பினர்கள் இணைந்து உருவாக்கி இணங்கினர். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் தாய்லாந்து இராஜ்ய அரசாங்கத்திற்கும் இடையிலான முன்மொழியப்பட்ட இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நோக்கொல்லைக்கு அமைச்சரவை 2018.07.03 அன்று அனுமதியளித்தது.

இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தாய்லாந்தின் கௌரவ பிரதம அமைச்சரின் வருகையின் போது 2 நாடுகளின் அரச தலைவர்களாலும் 2018 யூலை 12 அன்று சுதந்திர வர்த்தக பேச்சுவார்தையின் ஆரம்பத்தை தொடர்ந்து 2018 யூலை 13 அன்று கொழும்பில் நடைபெற்றது. முதற் சுற்று பேச்சுவார்த்தையின் போது இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கட்டமைப்பு, 9 செயற்குழுக்களை மற்றும் செயற்குழுக்கள் நோக்கெல்லையினை தாபித்தல் அத்துடன் இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கூட்டங்களுக்கான திட்டங்களை அமைத்தல் என்பன மீது இரு தரப்பினரும் இணங்கினர். இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2 ஆம் சுற்றுப் பேச்சுவார்தைகள் தாய்லாந்தின் பெங்கொங் நகரில் 2018 செப்தம்பர் 19 21 வரை நடைபெற்றது. 02 ஆம் பேச்சுவார்தையின் போது அனைத்து செயற்குழுக்களும் (பொருட்கள் வர்த்தகம், உற்பத்தி நாட்டு விதிகள், சுகாதார மற்றும் தாவர ஆரோக்கிய வழிமுறைகள், வர்த்தக பரிமாற்றங்கள், சேவை வர்த்தகம், மூலதனம், சட்ட மற்றும் நிறுவனசார் பிரச்சினைகள்) கலந்துரையாடல்களை நடாத்தின.

பேச்சுவார்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் வர்த்தகத் திணைக்களம், நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுத் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்தி சபை போன்றவற்றின் அலுவலர்களினதும் ஏனையவர்களின்

பங்கேற்புடன் வர்த்தக சம்மேளனங்கள் உற்பத்தி அமைப்புகள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் ஆலோசனைக் குழுக்கள் என்பவற்றின் பிரதிநிதிகளுடன் ஆலோசனைகள் நடாத்தப்பட்டன.

தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் சாத்தியப்பாட்டு ஆய்வொன்று 2017 செப்தம்பரில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. மேலும் அதிமேதகு சனாதிபதியின் மற்றும் நிதி மற்றும் ஊடக அமைச்சின் அவதானிப்புகளுக்கு அமைய, இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்ரதைகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்குகின்ற அதேவேளை இச் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஊடாக இலங்கை பெற்றுக்கொள்ளும் நன்மைகள் தொடர்பான வர்த்தக திணைக்களத்துடன் இணைந்த நிபுணர்கள் மூலமான ஆய்வினை மையப்படுத்தி அமைச்சரவையானது பணிப்புரைகளை வழங்கியிருந்தது. அதற்கமைய பேச்சுவார்தைகளுக்கு சமாந்திரமாக பொருளாதாரத்திற்கான இச் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நன்மைகளை ஆய்வு செய்வதற்கும் நாட்டிற்கான நன்மைகளை உச்சப்படுத்துவற்கு பயன்படுத்தக்கூடிய பல்வேறு சூழ்நிலைகளில் பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கும் மேலதிக ஆய்வொன்று நடாத்தப்பட்டு வருகின்றது. ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் 2019 இன் ஆரம்பப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட எதிர்பார்க்கப்படுவதுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்.





## ➢ மலேசியா- இலங்கை இணைந்த சாத்தியப்பாட்டு ஆய்வுகள் (MSLFTA)

இலங்கை இற்கும் மலேசியா இற்கும் இடையிலான இரு பக்க வர்த்தகம் 2015 இல் ஐ.அ.டொலர் 549.2 மில்லியனை விஞ்ஞியிருந்ததுடன் இது வரையில் அது தொடர்ச்சியாக வளரந்து வருகின்ற போதிலும் வர்த்தகப் பாய்ச்சல் தொடர்ச்சியாக சமச்சீரற்று காணப்படுகின்றது. என்பதுடன், இலங்கை பக்கத்தில் வர்த்தக பற்றாக்குறையொன்று காணப்படுகின்றது. இரு பக்க வர்த்தக உறவுகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இலங்கை கணிசமான வர்த்தகப் பற்றாக்குறையினை அனுபவிக்கின்றது. 2015 இல் உள்ளவாறு வர்த்தக பற்றாக்குறை ஏரக்குறைய ஐ.அ.டொலர் 472.79 ஆக இருந்தது. மேலும் மலேசியா பாரிய இறக்குமதி மூலங்களில் 6 ஆவதாக காணப்பட்டதுடன் 2015 இன் படி இலங்கைக்கான மொத்த உற்பாச்சலின் 2.70மூ கொண்டிருந்தது.

மலேசியாவிற்கான இலங்கை ஏற்றுமதிகளின் கணிசமான பங்கு ஆடை, இறப்பர் மற்றும் பெருந்தோட்டத் துறைகள் என்பனவாக ஒவ்வொன்றும் 2015 இன் தரவுகள் படி 25மூஇ 21மூ மற்றும் 10மூ ஆக இரு பக்க வர்த்தக கூட்டாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக மலேசியாவின் இறக்குமதிகள் பரந்தளவிலான உற்பத்திகளை உள்ளடக்குகின்றன. ஐ.அ.டொலர் 77.5 மில்லியன் பெறுமதியுடனான பாம் எண்ணெய் மற்றும் அதன் பாகங்கள் மொத்த இரு பக்க இறக்குமதிகளில் 15மூ இணை கொண்டிருந்தன. இது உள்நாட்டு கேள்வியின் 70மூ இனை திருப்திப்படுத்துகின்றது. அயனு லும்ப, போட்லன் சீமேந்து மிருக.். எண்ணெய் கொளுப்புகள் என்பன 2015 இல் முக்கிய இறக்குமதி பண்டங்களில் மேலும் சிலவாகக் காணப்பட்டன.

எவ்வாறாயினும் இருப்பக்க வர்த்தக உறவு நன்மைகளை உண்மையாக உச்சப்படுத்துவதற்கு இலங்கையின் மலேசியாவிற்கான ஏற்றுமதி பொருட்கள் தரத்தினையும் ஏற்றுமதிகளையும் கணிசமாக அதிகரிக்க வேண்டியுள்ளது. போதிய வாய்ப்புகளும் அதே போன்று முன்னேற்ற தடைகளும் இன்னும் காணப்பட இருக்கின்றன.
எனவே இரு நாடுகளுக்கும் இடையிலான முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இன் சாத்தியப்பாட்டினை மதிப்பிடுவதும் அதேபோன்று சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கலந்துரையாடப்படுமெனில் ஒத்துழைப்பின் சாத்தியமான துறைகளை

இனங்காண்பதற்கும் இணைந்த சாத்தியவள ஆய்வொன்றினை நடாத்துவது தேவையாகவுள்ளது. இருபக்க வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை வழுப்படுத்தி அதிகரிக்கும் பொருட்டு பொருளாதார பங்குடமை மீதான திட்ட வரையறை பத்திரம் 2016 நவம்பர் 17 அன்று மலேசியாவிடமிருந்து கிடைக்கப்பெற்றது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்தைகளை ஆரம்பிக்கும் சாத்தியப்பாட்டை கண்டறியும் பொருட்டு இணைந்த சாத்தியவள ஆய்வை நடாத்த உடன்பாட்டை குறிப்பிட்டு 2018.01.28 அன்று மலேசியாவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. ஆய்வை ஆரம்பிப்பதற்கு இணைந்த சாத்திய வள ஆய்வினை இலங்கை பாகத்தில் வகுக்க வேண்டியுள்ளது.

## ➢ பங்களாதேஷ் - இலங்கை இணைந்த சாத்தியப்பாட்டு ஆய்வுகள் (BSLFTA)

இலங்கைக்கும் பங்களதேசுக்கும் இடையிலான இருபக்க வர்த்தகம் 2016 அளவில் ஐ.அ.டொலர் 145 விஞ்சியிருந்ததுடன் இது வரையில் அது தொடர்சியாக வளர்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக இலங்கைக்கு சார்பாக வர்த்தக மிகையொன்று காணப்படுகின்றது. வர்த்தகத்தின் துரிதமான வளர்ச்சியானது ஏற்றுமதி பண்டங்களின் உள் அமைப்பின் மாற்றம் ஒன்றின் மூலம் இணையப் பெற்றிருந்தது. இதற்கு மேலதிகமாக ஏற்கனவே உள்ள இரண்டு உடன்படிக்கைகள் அதவாது ஆசிய பசுவிக் வர்த்தக மற்றும் தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைககளும் குறிப்பிடத்தக்க வரி உள்ளடக்கப்பட்ட குறைப்பினை நீடித்துள்ள போதிலும் இரு தரப்பாலும் குறைவாக பயன்படுத்துகின்றமை மேலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். எனவே இவ் இரு நாடுகளுக்குமிடையிலான முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சாத்தியப்பாட்டினை மதிப்பிடுவதற்கும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்தை செய்யப்படுமெனில் சாத்தியமான ஒத்துழைப்பு துறைகளை இனங்காண இணைந்த சாத்தியாப்பாட்டு உடன்படிக்கை நடாத்துவது அவசியமாகும். இருபக்க வர்த்தகத்தினையும் பொருளாதார உறவுகளையும் வலுப்படுத்தி அதிகரிக்கும் பொருட்டு பொருளாதார பங்குடமை மூலமான இலங்கைக்கும் பங்களாதேசுக்கும் இடையில் பங்களாதேன் டாகா நகரில் 2017 யூலை 14 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

- உடன்பட்ட உள்ளடகத்தை அடிப்படையாகக் கொண்டு இணைந்த சாத்திய வள ஆய்வொன்றை இரு தரப்பும் ஆரம்பித்தது.
- தரவு பகுப்பாய்வு மாதிரியினை கொள்வனவு செய்வது மீதான பெறுகை நடைமுறை நிறைவு செய்யப்பட்டு அம் மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டது.
- இணைந்த சாத்திய வள ஆய்வு 2019 பெப்புருவரியினுள் நிறைவு செய்யப்படும்.
- இணைந்த சாத்திய வள அறிக்கை 2010 மார்ச் ஆரம்பப் பகுதி அளவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## 4.3 பொருளாதார ஒத்துழைப்பு

### 4.3.1 பங்குதாரர்களுடனான மூலோபாய பொருளாதார ஒத்துழைப்பு

அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுமதி இலக்குகள் மற்றும் முதலீடு என்பனவற்றை அடைந்துகொள்வதற்கான அவசியப்பாடு கருத்திற்கொள்ளப்பட்டு எமது முறைமைக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்தான அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருதல், எமது எற்றுமதி நாடுகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்கள் என்பனவற்றை பன்முகப்படுத்தல், ஏற்றமதி அளவினை அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சந்தைகளை விரிவுபடுத்தல் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீது அதிகரித்த செலவினத்தினைக் கட்டுப்படுத்தி உற்பத்தியில் தொழில்நுட்பத்தினைக் கூட்டிணைத்தல் என்பன இலங்கைக்கு அவசியப்படுகின்றன. உலகின் பல்வேறு பாகங்களிலுமுள்ள நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பினை பலப்படுத்துவதன் மூலம் வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்நுட்ப மாற்றல்கள் என்பன பாரியளவில் இருதரப்பு ஒத்துழைப்புக்களுக்கு வழிவகுக்கம். அதற்கமைய, உபாயமுறைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சானது யப்பான், ஐரோப்பிய ஒன்றியம், தென் கொரியா தயாலாந்து, அவுஸ்திரேலியா ஹங்கேரி மற்றும் இந்திய போன்ற நாடுகளுடன் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார ரீதியான புதிய இருதரப்பு உபாயமுறைகள் ஒத்துழைப்புக்களில் உடன்படிக்கைசெய்து கொண்டுள்ளது.

### ➢ இலங்கை மற்றும் சீனா இடையிலான முதலீடு, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு

2016 இல் இலங்கை சீனாவிலிருந்து ஐ.அ.டொலர் 4.2 பில்லியன் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்தது. இது இலங்கையின் மொத்த இறக்குமதியில் 22மூ இற்கு வகை கூறுகின்றது 2016 இல் சீனாவிற்கான ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 199.15 மில்லியன் ஆகும். இலங்கை அரசாங்கம் சீனா அராசாங்கத்துடன் 2016 ஏப்ரல் 07 அன்று அனைத்தையும் உள்ளடக்கிய முதலீட்டு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கையினை அமுல்படுத்துவதன் மீது புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திட்டது. இது முதலீடு, பொருளாதாம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பவற்றிக்காக நடுத்தர மற்றும் நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களின் விவரணத்துடன் 2017 மே இல் கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு என்பவற்றிக்காக சீன மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் இடையிலான கட்டமைப்பு உடன்படிக்கையொன்றினை தொடர்ந்து நிகழ்ந்தது. திட்டமிடல் விவரணம் இருபக்க முதலீடு, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, ஒத்துழைப்பு பிரதேசங்களை வரிவுபடுத்தல், இருபக்க ஒத்துழைப்பு பொறிமுறைகளை சீர்படுத்தல், இருபக்க முதலீட்டு பொருளாதார மற்றும் தொழில்இரு தரப்பினரும் வெற்றி வெற்றியடைகிலன்ற உபாயங்களை ஊக்குவிபதன் ஊடாக பரஸ்பர நலன்களை அடையப்பெறல் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சமூக, பொருளாதார மற்றும் நட்பு ஒத்துழைப்பினை விருத்தி செய்தல் அத்துடன் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் உபாய பங்கான்மையினை விரிவுபடுத்துவதற்காக திடமான அத்திவாரம் இடல் என்பவற்றை வழிகாட்டி துரிதப்படுத்தி நிலைப்படுத்தி ஒழுங்காக அபிவிருத்தி செய்வதனை எடுத்துரைக்கின்றது.

கட்டமைப்பு உடன்படிக்கையின் கீழ் ஒத்துழைப்பு விடயப் பரப்புகளாக வேளாண்மை, தயாரித்தல், போக்குவரத்து, உட்கட்டமைப்பு, அரசாங்க சேவை, சக்தி மற்றும் மின்சக்தி, தகவல் தொடர்பூட்டல் மற்றும் சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

ஈடுபாடுகளினஃ ஒத்துழைப்பின் நோக்கெல்லையானது உடன்படிக்கையின் பரந்த கட்டமைப்பின் கீழ் அமுல்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது. இத்திட்டமிடல் விவரணம் 2020 2021 வரையான காலப் பகுதியில் 5 வருட அமுலாகத்தை உள்ளடக்குகின்றது.

தற்போதைய பல்வேறு அரசாங்க அமைச்சுக்கு கீழ் 25 கருத்திட்டங்கள் தொழிற்படுகின்றன. இதில் சில கருத்திட்டங்கள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## ➢ ஹங்கேரி - இலங்கை பொருளாதார கூட்டு ஒத்துழைப்பு

### ஒத்துழைப்பு வழங்கப்படுகின்ற துறைகள்

- நீர் முகாமை
- உட்கட்டமைப்பு அபிவிருத்தி
- போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பு, பண்டக சேவைகள்
- இயற்கை சூழல் மற்றும் வளங்களைப் பாதுகாத்தல்
- வலுச்சக்தி
- விவசாயம், உணவுக் கைத்தொழில் மற்றும் உணவுப் பாதுகாப்பு
- சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுகாதாரக் கைத்தொழில்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பாடல்
- விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி
- சுற்றுளாத்துறை
- வங்கியிடல், முதலீடு மற்றும் நிதி
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள்

இலங்கையும் ஹங்கேரியும் தம் இரு நாடுகளுக்கிடையிலும் வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபாடுகாட்டிக் கொண்டிருக்கின்றன. இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு சம்பந்தமான உடன்பாடு 2017 திசெம்பர் 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின் சரத்துகளை நடைமுறைப்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்கிடையில் கூட்டு ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படும். முதலாவது கூட்டு ஆணைக்குழுக் கூட்டம் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இடம்பெறவுள்ளது.

## ➢ இலங்கை – தென் கொரியா பொருளாதார ஒத்துழைப்பு

### இலக்குகள்

- இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துதல்.
- இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத் தொடர்புகளை மேம்படுத்துவதற்கான புதிய பாதைகளை திறத்தல்.
- இரு நாடுகளுக்களினதும் தொழில்முயற்சியாண்மை நிறுவனங்களுக்கிடையில் வலையமைப்பு செயற்பாடுகளுக்கு வசதியளித்தல் மற்றும் நெருங்கிய கைத்தொழில் ஒத்துழைப்பினை ஊக்குவித்தல்.

### எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு

- இருதரப்பு முதலீடுகளை ஊக்குவித்தல்
- இருதரப்பு வர்த்தகத்தினை அதிகரித்தல்
- அபிவிருத்தி அனுபவங்களை பரிமாறிக்கொள்ளல்.
- புதிய தொழிற்சாலைகளைஅபிவிருத்திசெய்தல்.
- வர்த்தக தொடர்புகளை அதிகரித்தல்
- தொழில்நுட்ப பரிமாற்றம்
- பொருளாதாரத் துறைகளை விருத்திசெய்வதன் மூலம் தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.

பல நூற்றாண்டு காலமாக பௌத்த கலாச்சார உறவுகளை அடிப்படையாகக்கொண்டும் வரலாற்றுரீதியானநீண்டநட்புறவுகளையும் இலங்கை மற்றும் தென் கொரியா குடியரசு கொண்டுள்ளது.
பரஸ்பர நலன்களுக்காக பொருளாதார துறைகளின் ஒத்துழைப்புக்களை பலப்படுத்தும் வகையில்,இரண்டு நாடுகளக்குமிடையிலும் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பிலான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. அதில் முதலீட்டு பங்குடைமை, வர்த்தக தொடர்புகள், சுற்றுலாத் துறை வர்த்தக மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.இலங்கை - தென்கொரிய பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையின் கீழான முதலாவது கூட்டு ஆணைக்குழுக் கூட்டம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி இலங்கையின் கொழும்பு நகரில் இடம்பெற்றது.

## ➢ இலங்கை இந்தோனேசியா பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கைக்கான விஜயத்தின் போது இந்தோனேசிய ஜனாதிபதி 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24-25 ஆந் திகதிகளில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அதன் போது கடந்த 65 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் இருதரப்பு இராஜதந்திர உறவுகளையும் இரு தலைவர்களும் நினைவுகூர்ந்தள்ளதோடு, இரு நாடுகளுக்குமிடையில் காணப்படும் நட்புறவு வலுவானதாகக் காணப்படுவதனையிட்டு இரு தலைவர்களும் திருப்பதி தொரிவித்ததோடு, உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் மற்றும் விரிவுபடுத்துவதற்கும் இரு தலைவர்களும் உடன்பட்டனர்.

இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான அண்மைக்கால உயர் மட்ட விஜயங்களின் போது பரிமாற்றப்பட்ட பரிமாற்றங்களை இரு நாட்டுத் தலைவர்களும் வரவேற்றதோடு, இதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையில் உத்வேகத்தினைக் கட்டியெழுப்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான உயிரோட்டமான கடல்சார் இணைப்பினைக் கருத்திற்கொண்டு வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் பரந்தளவில் பரஸ்பரம் கலந்துரையாடியுள்ளதோடு, இரு நாடுகளுக்கிடையிலும் பொருளாதார ஒத்துழைப்பினை ஆழப்படுத்துவதற்கும் மற்றும் அகலப்படுத்துவதற்கும் அவர்களின் உறுதிப்பாட்டினையும் அவர்கள் மீண்டும் வலியுறுத்தினர்.

இருதரப்பு பொருளாதார உடன்படிக்கையில் இற்றை வரையில் பயன்படுத்தப்படாத உள்ளாற்றலினைப் பயன்படுத்துவதற்கான தேவையினை இரு தலைவர்களும் அறிந்துகொண்டதோடு, அதற்காக வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பிலான கூட்டுச் செற்பாட்டுக் குழுவொன்றினை அவசரமாகத் தாபிப்பதற்கான தேவை தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பிலான கூட்டுச் செயற்பாட்டுக்குழு

- நெருக்கமான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை உருவாக்குதல்.
- வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்.
- வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்களை மேம்படுத்தல்.
- இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீடு என்பனவற்றின் ஓட்டத்தினைத் துரிதப்படுத்துவதற்காக பரஸ்பர நலன்களையும் பரஸ்பர மதிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்ட சாத்தியமான துறைகளில் மற்றும் அல்லது பகுதிகளில் ஒத்துழைப்பினை ஊக்குவித்தல்.

## ➢ இலங்கை – தாய்லாந்து இடையிலான உபாயமுறைகள் பொருளாதார பங்கேற்பு

### இலக்குகள்

- முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக வசதிகளை ஏற்படுத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக தொழில்நுட்ப ஒத்துழைப்பை பலப்படுத்தல்.
- பொருளாதார ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் மற்றும் அதிகரித்தல்.
- தகவல், அனுபவங்கள் மற்றும் அறிவு என்பனவற்றை பரிமாற்றல் மற்றும் பகிர்ந்துகொள்ளல் என்பனவற்றிற்காக உதவி மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்குதல்
- பொருளாதாரச் செயற்பாடுகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் கொள்திறனினை பலப்படுத்தல் மற்றும் பங்கேற்பினை அதிகரிப்பதன் மூலம் பொருளாதாரத்தில் நிலையான அபிவிருத்தியினை ஊக்குவித்தல்.

### எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

- வரி அல்லாத தடைகளை நீக்குதல்.
- வணிக துறைகளின் போட்டித்தன்மை மற்றும் விளைதிறன்களை அதிகரித்தல்
- முதலீட்டுக்காக புதிய வாய்ப்புக்களை உருவாக்கல்.
- தொழில்நுட்ப மாற்றல் மற்றும்அபிவிருத்தி அனுபவங்களை பரிமாறிக்கொள்ளல்.
- புதிய உள்நாட்டுக் கைத்தொழிற்துறைகளை அபிவிருத்தசெய்தல்.
- வணிக தொடர்புகளை அதிகரித்தல்.

இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான உபாயமுறைகள்பொருளாதார ஒத்துழைப்பு

தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கையானது தாய்லாந்து நாட்டின் கௌரவ பிரதமரது இலங்கைக்கான விஜயத்தின் போது 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதன் மூலம் 1955 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையில் நிலைத்து பலமாகத் தொடரப்படுகின்ற இரு பக்க உறவுகள் இரு நடுகளுக்கிடையிலானநீண்ட கால இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் பலப்படுத்தும்என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் விளைவாக 1997 ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகத்திலும் பலமான அதிகரிப்பொன்று காணப்பட்டது மேற்குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது முதலீடு,விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடித்துறைக்கு வசதிகளை வழங்கல் மற்றும் அதனை ஊக்குவித்தல், சுற்றுளாத்துறையினை ஊக்குவித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையினை ஊக்குவித்தல் மற்றும் அதனை விரிவுபடுத்தல் போன்ற துறைகளை உள்ளடக்கிக் காணப்படும். இந்த கூட்டு ஒத்துழைப்பானது கிராமிய சமூகங்களுக்கான உகந்த சமூக மற்றும் பொருளாதார நிலமைகளை மேலும் வரிவாக்குவதற்கு இலங்கைக்கு குறிப்பிடத்தக்களவில் உதவும்.



## ➢ அவுஸ்திரேலியா - இலங்கை வர்த்தக மற்றும் மூதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கை

### அர்ப்பணிப்புள்ள தலைமைகள்

- 2017 பெப்ரவரியில்இலங்கையின் கௌரவ பிரதமரின் அவுஸ்திரேலிய விஜயம்.
- 2017 மே மாதத்தில் அதிமேதகு ஜனாதிபதியின் அவுஸ்திரேலிய விஜயம்
- 2017 நவம்பரில் கௌரவ அவுஸ்திரேலிய பிரதமரின் இலங்கைக்கான விஜயம்

### முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்

- உபாயமுறைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் சம்பந்தமான அமைச்சு மற்றும் அவுஸ்திரேலிய வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தகம் சம்பந்தமான திணைக்களம் என்பனவற்றின் பிரதிநிதிகளுடன் இணைந்து வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பிலான குழுவொன்றினைத் தாபித்தல். வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்பிலான முதலாவது கூட்டத்தினை 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி அவுஸ்திரேலியாவின் கன்பரா நகரில் நடாத்துதல்.

- இரு நாடுகளுக்கிடையில் வர்த்தக மற்றும் முதலீட்டை பலப்படுத்துவதற்காக இருதரப்பு வர்த்தக ஒத்துழைப்பினை ஊக்குவித்தல்.

உள்ளடக்கப்பட்டுள்ள துறைகள்: விவசாய வர்த்தகம், உணவு மற்றும் குடிபானங்கள், சுற்றுளா மற்றும் விருந்தோம்பல், கல்விச் சேவைகள், எரிசக்தி மற்றும் கனிப்பொருட்கள், உட்கட்டமைப்பு வசதிகள்,தயாரிப்புத்துறை,தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள், புடவை மற்றும் ஆடைகள் இறப்பர் மற்றும்ம மீன்பிடிக் கைத்தொழில்

இலங்கை அவுஸ்திரேலிய வர்த்தக மற்றும் முதலீட்டு வேலைச் சட்டகத்தின் கீழான முதலாவது கூட்டு ஆணையகமானது 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆந் திகதி அவுஸ்திரேலியாவின் கன்பெரா நகரில் நடாத்தப்பட்டது. மேற்குறித்த கூட்டத்தின் பின்னர் பின்வரும் பிரதான செயற்பாடுகள் அடையாளங் காணப்பட்டன.

- வர்த்தகம் மற்றும் முதலீடு என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக உயர் மட்ட விஜயங்களை ஊக்குவித்தல்.

- தனிமைப்படுத்துதல் முறைமைகளுக்குமத்தியில் மேலும் உட்புகுத்தன்மை ஊக்குவிப்பதற்கான பரஸ்பர அங்கீகார ஒப்பந்தங்கள் மற்றும் பிற சான்றிதழ்களைக் கருத்திற்கொள்ளல்

- இலங்கையின் பழங்கள் மற்றும் காய்கறிகள் மற்றும் மூலிகைப் பொருட்கள் என்பனவற்றில் அடையாளங்காட்டப்பட்ட உற்பத்திகளை முன்னுரிமை அடிப்படையில் துரிதமாகவிடுவிப்பதற்கான செயற்பாடுகளைக் கூட்டிணைத்தல்.

- மூலதனப் பொருட்கள் எனக் கருதப்படுபவைகள் மீது குறிப்பாக சுற்றுளாத் துறையில்முன்னேற்றகரமான வரித் தீர்வைக் குறைப்புக்களை கருத்திற்கொள்ளல்

- இறக்குமதிகளுக்காக, குறிப்பாக விவசாய பொருட்கள் மீதான தீர்வைகளின் ஸ்திரத்தன்மையினைக் குறைப்பதற்கான வழிவகைகளை கருத்திற்கொள்ளல்.

- வினைத்திறனான செயலாற்றுகையினை இயலுமாக்கும் வகையில் பாரியளவிலான பெறுகைகளுக்காக போட்டித்தன்மைமிக்க விலைமனுக் கோரல் செயற்பாடுகளை உறுதிப்படுத்தல்.

- தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் வர்த்தக இணைப்புக்களை உருவாக்கல்.

- விவசாயம் மற்றும் மீன் வளர்ப்புத்துறையில் அதிக ஒத்துழைப்பினைத் தக்கவைத்தல்.

- தொழில் நுட்ப ரிதியிலான பிடவைகள்,தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் குறுங்காலப் பயிர்கள் உற்பத்தியில் ஆஸ்திரேலிய முதலீடுகள் மற்றும் கூட்டு முயற்சிகளை ஊக்குவிக்குவித்தல்

- வினைத்திறன் ஆணையகம் ஒன்றினைத் தாபித்தல் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் என்பனவற்றிற்கான உள்நாட்டு ஆதரவு உள்ளடங்கலாக பொருளாதார மறுசிரமைப்புக்கள் மற்றும் வர்த்தகத்தினைத் தாராளமயமாக்கலினைச் செயற்படுத்துவதற்காக அவுஸ்திரேலியாவின் அனுபவங்களைப் பகிர்ந்தகொள்ளல்.





## ➢ இலங்கை - இந்தியா இடையிலான பொருளாதார கருத்திட்டங்கள் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை

சமத்துவம் மற்றும் பரஸ்பர நலன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இரு நாட்டு மக்களின் நலனினை உறுதிசெய்கின்ற கூட்டு முயற்சிகள் மற்றும் ஏனைய ஒத்துழைப்புச் செயற்பாடுகள் மூலமாக முன்னேற்றகரமான முறையில் பாரியளவிலான பொருளாதார, முதலீட்டு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பனை அடைதல்

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

பிராந்தியத்தில் பொருளாதார செழிப்பினை ஊக்குவிக்கும் வகையில் பொருளாதாரஈடுபாடு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பனவற்றினை ஆழமாக்குத பொருளாதார செயற்திட்டங்களில் ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இதன் ஊடாக இலங்கையின் அபிவிருத்திற்கு உகந்ததாக அமையவுள்ள பொருளாதார கருத்திட்டங்களில் ஒத்துழைப்பதற்கான வேலைச்சட்டகத்தினை இது வழங்குகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையானது இருதரப்பு நாட்டு மக்களின் பரஸ்பர நலனிற்காக அதிகரித்த பொருளாதார, முதலீடு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பினூடாக இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்காக அவற்றின் தொடர்ச்சியான முயற்சிகள் பாரம்பரியமான நெருங்கிய மற்றும் நட்புறவுகளை மீள உறுதிப்படுத்துகிறது.

உட்கட்டமைப்பு வசதிகள், புகையிரதப் தண்டவாளங்கள், பெற்றோலியம், நீர் வழங்கல், சுகாதாரம், வீடமைப்பு மற்றும் போக்குவரத்து துறைகளில் இந்திய இலங்கை ஒத்துழைப்புடன் முன்னணிச் செயற்திட்டங்கள் சிலவற்றினை செயற்படுத்தியுள்ளது.பாரிய அளவிலான ஒத்துழைப்புக்கள் மூலம் இலங்கையுடன் கூட்டிணைதல் மற்றும்

உற்பத்தி இயலளவினைக் கட்டியெழுப்பல் மூலம் ஆழமான பொருளாதார செயற்பாட்டிற்கான பாதையினை திறப்பதற்கானவலுவான சந்தை மற்றும் முதலீடுஎன்பனவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

## கருத்திட்ட முன்றேற்றங்களும் அடுத்த கட்ட நடவடிக்கைகளும்

மெகா வோட் 500இனைக் கொண்ட திரவ இயற்கை எரிவாயு மின் ஆலை - தற்போது இடம்பெறுகின்றது.

(இலங்கை மற்றும் இந்திய தரப்பினர்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த செயற்பாட்டுக் குழுவின் கலந்துரையாடலின் மூலம் மேற்கொள்ளப்பட்டது)

மிதக்கும் திரவ இயற்கை எரிவாயு உற்பத்தி அலகு (கூட்டிணைந்த வர்த்தகத்திற்காக இலங்கை, இந்தியா மற்றும் யப்பானியர்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. சாத்தியப்பாட்டு ஆய்வும் நிறைவுபெற்றுள்ளது)

மெகா வோட் 50 இனைக் கொண்ட சூரிய மின் நிலையெமன்றினை சாம்பூரில் நிறுவுதல் - நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (இலங்கை மற்றும் இந்திய இரு தரப்பினர்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த செயற்பாட்டுக் குழுவில் கலந்துரையாடப்படுகின்றது)

திருகோணமலையில் மேல்மட்ட எண்ணெய் களஞ்சியசாலையினை கூட்டாக அபிவிருத்திசெய்தல். தற்போது நடைபெறுகின்றது (கூட்டு முயற்சியொன்றுடன் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக அமைச்சரவையும் அங்கிகாரம் வழங்கியுள்ளது.)






## ➢ இலங்கை – செக் குடியரசு என்பனவற்றிக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு

### இலக்குகள்

- இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை அதிகரித்தல்
- இருதரப்பு முதலீட்டு வளர்ச்சிக்கு வசதியளித்தல் மற்றும் நாடுகளுக்கிடையில்பொருளாதாரம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளப்படுத்தல்.
- இரு நாடுகளினதும் தொழில்முயற்சி நிறுவனங்களுக்கிடையில் நெருக்கமான வர்த்தகம் மற்றும் தொழிற்றுறை ஒத்துழைப்பினை மேம்படுத்தல் மற்றும் வலையமைப்புச் செயற்பாடுகளை எளிதாக்கல்.
- இரு நாடுகளினதும் தனியார் துறையினுடைய உயர்ந்த பரஸ்பரத்தை முன்னேற்றி அந்தந்த நாடுகளின் வர்த்தக மற்றும் பொருளாதார கொள்கைகள் சம்பந்தமாக புரிந்துணர்வை ஏற்படுத்துதல்
- இரு நாடுகளினதும் பரஸ்பர நலனில் ஒத்துழைப்பினை ஊக்குவித்தல்.

பரஸ்பர நலன்களுக்காக பொருளாதார துறைகளின் ஒத்துழைப்புக்களை பலப்படுத்தும் வகையில், இருதரப்புபொருளாதார ஒத்துழைப்பு தொடர்பிலான உடன்படிக்கையொன்று 2018 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 07 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. குறித்த உடன்படிக்கையானது இருபக்க வர்த்தகம்,

முதலீடு மற்றும் பொருளாதார உறவு என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக கூட்டுக் குழுவொன்றினைத் தாபிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குகிறது.

மேற்குறித்த உடன்படிக்கையானது இரு நாடுகளினதும் தொழில் முயற்சி நிறுவனங்களுக்கிடையில் நெருக்கமான வர்த்தகம் மற்றும் தொழிற்றுரை ஒத்துழைப்பினை மேம்படுத்தல் மற்றும் வலையமைப்புச் செயற்பாடுகளை எளிதாக்கல். இருதரப்பு முதலீட்டு வளர்ச்சிக்கு வசதியளித்தல் மற்றும் நாடுகளுக்கிடையில் பொருளாதாரம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளப்படுத்தல்.இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை அதிகரித்தல் என்பனவற்றினை உள்ளடக்கியுள்ளது.

இருதரப்பு பரஸ்பர ஒத்துழைப்பானது இரு நாடுகளுக்கிடையிலும் இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் என்பதோடு வெளிநாட்டு முதலீடுகளை ஆளுகின்ற ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்கள் தொடர்பில் தகவல் பரிமாற்றத்தினூடாக முதலீட்டுப் பாய்ச்சல்களுக்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கும்.

நவீன பல்பரிமாணத்திலிருந்து புதிய பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக இரு தரப்பினருக்கும் வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கின்ற வழிமுறையொன்று தொடர்பில் இருதரப்பு பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றினை ஆழப்படுத்துவதற்கான முதலீட்டிலிருந்து சினேகபூர்வமான உறவுகளை விரிவுபடுத்துவதற்கும் இருதரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.

## ➢ இலங்கை – யப்பான் முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்

## இலக்குகள்

யப்பானிய முதலீட்டுகளை கவர்ந்தீர்த்துக் கொள்வதற்காக மிகவும் உசிதமான சூழலையும், வெளிப்படைத் தன்மையையும் மற்றும் நல்லாட்சியினையும் ஏற்படுத்துதல்.

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

எதிர்காலச் சாத்தியப்பாடுகள் மற்றும் மனோநிலைகள் என்பன கவனத்திற்கொள்ளப்பட்டுயப்பான் நாட்டின் நேரடி முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஊக்குவித்தல், அவ்வாறே,தற்போதைய ஆற்றல்மிக்க யப்பானிய முதலீட்டாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காகவும் இலங்கையில் வர்த்தக சூழலினை மேம்படுத்துவதற்காக கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்கள், ஒத்துழைப்பு மற்றும் கூட்டுஒத்துழைப்பு என்பனவற்றின் மூலம்உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை இலக்காகக் கொண்ட அத்தகைய முன்னெடுப்பக்களினால் இலங்கையில் சாதமான முதலீட்டு சூழலினை தோற்றுவித்தல்.

யப்பானிலிருந்தான இலங்கைக்கு கிடைக்கப்பெறும் மேலதிக முதலீடுகளை ஊக்குவிப்புச் செய்வதற்கான எதிர்காலத் திட்டங்கள்யப்பான் இலங்கை பொருளாதார கொள்கை தொடர்பிலான கலந்துரையாடலின் விளைவாகும். யப்பான் இலங்கை பொருளாதார கொள்கை ரீதியான கலந்துரையாடல் வலுவான பொருளாதார முயற்சியினை இலக்காகக் கொண்டு 2015 ஒக்தோபர் மாதத்தில் கௌரவ பிரதமர் அவர்களினால் யப்பான் நாட்டுக்குமேற்கொள்ளபட்ட விஜயத்தின் போது இலங்கைக்கும் யப்பானுக்கும் இடையில் விரிவான பங்காளர் தொடர்பான கூட்டுப் பிரகடனம் முன்மொழியப்பட்டது.

அதற்கிணங்க, யப்பானின் உயர்மட்ட முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்கும் நோக்கத்துடன் உபாயமுறைகள் சாத்தியமான முதலீடுகள் மற்றும் முதலீட்டு பங்காளிகளை இனங்கண்டு கொள்வதற்காக இலங்கை யப்பான் பொருளாதார கொள்கை உரையாடலொன்று (நீனு)நிறுவப்பட்டுள்ளது. 2017 ஏப்ரல் மாத செயற்பாட்டுக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டு யப்பான் - இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானத்திற்கு வந்துள்ளது. 2017 நவம்பர் மாதம் 23 ஆந் திகதி 4 ஆம் கூட்டிணைந்த செயற்பாட்டுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது. செயற்பாட்டுக் குழுக் கூட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

## முன்னேற்ற மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் (திட்ட வரைவிற்கமைவாக)

போட்டித்தன்மைமிக்க முதலீட்டு மற்றும் வர்த்தக சூழலினை அடைந்துகொள்ளல்

- சினேகபூர்வமான யப்பானிய முதலீட்டுக் கைத்தொழில் வலயம் அல்லது யப்பானிய கைத்தொழில் நகரத்தை நிறுவவுவதற்கான சாத்தியப்பாட்டினை ஆராய்தல் (நிறைவுபெற்றுள்ளது)

- யப்பானிய பலசரக்குப் பொருட்களை அறிமுகப்படுத்துவதற்கும் மற்றும் சில்லறைக் கைத்தொழில் மற்றும் பகிர்வினை அபிவிருத்திசெய்வதற்காக யப்பானிய முதலீட்டினை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளை ஆராய்தல்.

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை யப்பானிய முதலீட்டு ஒத்துழைப்பினைக் கொண்டு பலப்படுத்தல்.(தொடருகிறது)

- யப்பானிய முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் தடைகளைக் குறைத்தல் மற்றும் இல்லாதொழித்தல்.(தொடருகிறது)

- முதலீட்டு ஊக்குவிப்புக்களை விரிவுபடுத்தல்.(நிறைவுபெற்றுள்ளது)

- ஒத்துழைப்புக் கைத்தொழில்களை வளர்தெடுத்தல் மற்றும் வர்த்தக தொடர்புகளை அபிவிருத்திசெய்தல் (தொடருகிறது)

**பண்டக சேவை மையத்தினை அடைந்துகொள்வதற்காக சுங்க மற்றும் பண்டக சேவைச் செயற்பாடுகளை மேம்படுத்தல்**

- துரித சுங்கச் சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கான யப்பானிய கம்பனிகளுடன் சாத்தியப்பாட்டினை ஆராய்தல் (கலந்துரையாடல் மட்டத்தில்)

- சுங்க மற்றும் பண்டக சேவை செயற்பாடுகளை மேம்படுத்தல் (கலந்துரையாடல் மட்டத்தில்)

**இலங்கைக்கும் யப்பானிற்குமிடையிலான வினைத்திறனான கலந்துரையாடல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் முறைமையினைத் தாபித்தல்.**

- வருடாந்தம் அரச தனியார் கூட்டு மன்றத்தினை வருடாந்தம் நடாத்துதல்(தொடருகிறது)

- ஜைக்கா நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட முதலீட்ச் சூழல் தொடர்பிலான தகவல் திரட்டல் ஆய்வு (நிறைவுபெற்றள்ளது)

- இருதரப்பு தகவல் பரிமாற்றல் முறைமையினைத் தாபித்தல் (தொடருகிறது)

- வரி மற்றும் தீர்வை வரி என்பனவற்றிற்கான சட்டரீதியாக குறித்துரைக்கப்படும் கடப்பாட்டுத் திகதியினை ஏற்படுத்தல் (தொடருகிறது).





## ➢ ஐரோப்பிய ஒன்றியத்துடனான அதிகரித்த பொருளாதார ஒத்துழைப்பு

### இலக்குகள்

இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றிற்கு இடையிலான பொருளாதார உறவுகளை பலப்படுத்தல்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளின் பெறுமதியனை அதிகரித்தல்

முதலீட்டாளர்களின் நம்பிக்கையினை உறுதிப்படுத்தல், தற்போதைய முதலீட்டாளர்களைப் பாதுகத்தல் மற்றும் அதிக முதலீடுகளைக் கவருதல்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 29 சதவீதப் பொருட்களை இலகுவாக 2017 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கு ஏற்றுமதிசெய்வதற்கான வர்த்தக சூழலினைத் தோற்றுவித்ததன் மூலம் ஐ.அ.டொ.3.3 பில்லியன் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதிசெய்யப்பட்ட பிரதான உற்பத்திப் பொருட்களாக : ஆடைகள் (60மூ), இறப்பர் முடிவுப் பொருட்கள் (9மூ)இ பொறியியற்பொருட்கள் (4.6மூ)இஉணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (3.3மூ)இதேயிலைப் பக்கெட்டுக்கள்(2.6மூ)இ உண்ணத்தக்க மீன் உற்பத்திகள்(2மூ) மற்றும் தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகள் (3.1மூ) எனக் காணப்படுகின்றது.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான பொருளாதார உறவினை பலப்படுத்தும் வகையில், வர்த்தகம் தொடர்பிலான இலங்கை ஐரோப்பிய ஒன்றிய கூட்டுப் பணிக்குழு, மற்றும் இலங்கை ஐரோப்பிய ஒன்றிய முதலீட்டாளர் கலந்துரையாடல் குழு போன்ற இரண்டு பிரதான மன்றங்கள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து தாபிக்கப்பட்டுள்ளன.



**வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் தொடர்பிலான இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கிடையிலான கூட்டுப் பணிக்குழு**

வர்த்தகம், முதலீடு மற்றும் ஜி.எஸ்.பி ுதொடர்பில் இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையில் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பிரதான தளமாக இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கூட்டுப் பணிக்குழு செயற்படுகின்றது.குறித்த கூட்டுப் பணிக்குழுவானது2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந்திகதி கொழும்பில் ஒன்றுகூடியது.

**இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய முதலீட்டாளர் கலந்துரையாடல்**

இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய முதலீட்டாளர்களுக்கிடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளில் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதனை இலக்காகக் கொண்டள்ளது

## ➢ ஜி.எஸ்.பி ̧ இன் கீழ் வர்த்தக உதவி முறைமையின் அபிவிருத்தி

- ஜி.எஸ்.பி ̧ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் வர்த்தக செயலாற்றுகை

ஜி.எஸ்.பி ̧ இந்நாட்டிற்கு மீளக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான மொத்த ஏற்றுமதியில் 11.9மூ வளர்ச்சி கண்டுள்ளது. ஜி.எஸ்.பி ̧( ஐ.அ.டொ.மில் பெறுமதியில்) இந்நாட்டிற்கு மீளக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் (யூன் - திசெம்பர் 2017) மற்றும் அதற்கு முன்னரும் (யூன் - திசெம்பர் 2016) ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் வர்த்தக செயலாற்றுகை தொடர்பான ஒப்பீட்டாய்வு.







## ஜி.எஸ்.பி ̧ உடன் சம்பந்தப்பட்ட விடயங்களை அடைந்துகொள்ளல்

பேண்தகு அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி என்பனவற்றினை நிலைநிறுத்தும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜி.எஸ்.பி ̧ சலுகையினை இலங்கைக்கு வழங்கியுள்ளது. குறித்த சலுகைகளைப் பெறுகின்ற நாடுகள் பேண்தகு அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட 27 சர்வதேச மரபொழுங்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட்டது. குறித்த மரபொழுங்குகளைசெயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வைசெய்தல் என்பனவற்றிற்காக இலங்கை,சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் பங்கேற்புடன் நான்கு பிரதான தொகுதிகளைக் நான்கினைக் பொறிமுறையொன்றினை நிறுவியுள்ளது.

- மனித உரிமைகள்
- தொழிலாளர்கள்
- நல்லாட்சி
- சுற்றுச் சூழல்

## ➢ உலக பொருளாதார மன்றத்துடனான ஈடுபாடு

இலக்குகள்

பின்வரும் முற்போக்கான கருத்துக்களைக் கொண்டு பூகோள சிந்தனை மீது தாக்கம் செலுத்துதல்

- பல்தரப்பு பங்குதாரர்களுடனான உறவுஇ
- புத்தாக்கம் மற்றும் போட்டித்தன்மைஇ
- சர்வதேச ரீதியான கூட்டுக் குடியுரிமை
- நான்காவது கைத்தொழில்புரட்சி அல்லது கைத்தொழில் 4.0

## உலக பொருளாதார மன்றத்தினால் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

- உலக பொருளாதார மன்றம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு சபை என்பனவற்றின் உதவியோடு அபிவிருத்திசெய்யப்பட்ட இலங்கையின் நிலைமாற்றப்பட்ட வரைபடம் தொடர்பிலான அர்ப்பணிப்பு
- இலங்கையின் கைத்தொழிற்துறையில் தொழில் நுட்பவியல் சார்ந்த முன்னேற்றத்திற்கான தொழில்நுட்ப ரீதியான உள்ளீடுகள்.
- புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சியாண்மை மூலோபாயத்தினை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப உள்ளீடுகள்
- உலக பொருளாதார மன்றம் (று௨கு) என்பது அரச தனியார் கூட்டு ஒத்துழைப்புக்கான சர்வதேச நிறுவனம் ஆகும். அது பூகோள ரீதியான பொருளாதார மட்டத்தினை மேம்படுத்துவதற்கும் மற்றும் பூகோள ரீதியான முன்னெடுப்புக்களைச் செயற்படுத்துவதற்குமானதோரு களமாகவும் காணப்படுகின்றது. மேலும் இது சர்வதேச அளவில் பங்குபற்றலுக்கும் பங்களிப்பு வழங்குவதற்கும் கற்பதறகும் மற்றும் உலகளாவிய மட்டத்தில் இலங்கை போன்ற நாடுகளுக்கு சிறந்ததொரு தளத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கும் நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற டாவோஸ் மாநாட்டில் கௌரவ பிரதமரின் பங்குபற்றலோடு இலங்கை உலக பொருளாதார மன்றத்தில் செற்பாட்டு பங்காளராக தனது பங்கை ஆரம்பதித்தது. 2017 ஜனவாரி மாதம் நடைபெற்ற டாவோஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமருக்குகம் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் பிரதிநிதிகள் சபைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மேலும் இதற்கு முன்னர் சீனா இந்தியா மற்றும் டியன்ஜின் போன்ற நாடுகளில் நடைபெற்ற பொருளாதார மாநாடுகளிலும் இது சம்பந்தமாக ஏனைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.
- மேற்குறித்த நிச்சியதார்த்தத்தின் பரந்த மற்றும் பல்துறைத் தன்மை என்பன கருத்திற்கொள்ளப்பட்டு, 2017.05.24 ஆந் திகதியன்று நடைபெற்ற பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவானது தேசிய மையக் குழுவொன்றினை இந்த அமைச்சின் கீழ் ஏற்படுத்துவதற்கு தீர்மானித்தது. அதற்கமைய, உலக பொருளாதார மன்றத்தின் செயற்பாடுகளை முறையாக அடைந்துகொள்வதற்கான முன்னேற்பாடான செயற்பாடாக தேசிய மையக் குழுவினை அமைச்சு நிறுவியது. அத்துடன் தேசிய மையக் குழு எண்ணக்கருக்களை சதாகமான முறையில் உள்வாங்குவதற்கான பின்னூட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் என்பனவற்றினை அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

2008 சனவர் 16 அன்று விசேட கூட்டமென்றில் உபாயமுறைகள்அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக கௌரவ அமைச்சர் தேசிய மைய அணியின் தலைவருடன் இணைந்து உலக பொருளாதார மன்றத்தின் புதிய தலைவர் திரு போர்ச் பிரன்ட அவர்களையும் மற்றும் உலக பொருளாதார மன்றத்தின் அலுவலர்களையும் சந்தித்ததுடன் பிந்திய விடயங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதுடன் முக்கிய அடுத்த கட்ட நடவடிக்கைகளும் கலந்துரையாடப்பட்டன. மீளாய்விற்குட்படும் ஆண்டின்போது அமைச்சு உலக பொருளாதார மன்றத்துடன் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டது.

- இலங்கையினை மாற்றியமைத்தல் திட்டம்
- உற்பத்தியின் எதிரகாலத்தினை வடிவமைத்தல்“ முநைமை முயற்சி
- நிலைபெறத்தக்க உற்பத்தியனை துரிதப்படுத்தல் முயற்சி
- உலக புத்தாக்க மற்றும் தொழில்முயற்சிக்கான நிலையம்
- ஆசியன் மீதான உலக பொருளாதார மன்றம்
- ஊஉலக பொருளாதார மன்ற வருடாந்த புதிய சம்பியன் கூட்டம்
- பல நாடுகளை திரட்டுதல் மீதான வரத்தக வசதிப்படுத்தல் கருத்திட்டத்தின் உலக கூட்டமைப்பு

மன்றத்தினால் உருவாக்கப்பட்ட “இலங்கையினை மாற்றியமைத்தல் திட்டம்“ இறுதிப்படுத்தப்பட்ட தற்போது இணையத்தளம் ஊடாக கிடைக்கப்பெறுகின்றது. இவ் “இலங்கையினை மாற்றியமைத்தல் திட்டம்“ உபாயமுறைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச

வர்த்தக அமைச்சினால் இரு தொகுதிகளாக வருகைதந்த நாட்டுக்கான சொத்து நிதய துதுலீட்டாளர்கள் பேராளர்களுக்கு ( 2018 சனவரி மற்றும் 2018 ஏப்றல்) ஆயத்த வாசிப்பு பொருட்களாக (இலங்கைப் பொருளாதாரம், ஆரவமுள்ள துறைகள், சவால்கள் போன்ற) வழங்கப்பட்டது

2018 மார்ச் இல் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் ஆலோசகர் திரு அனுச்க விஜேசிங்க முனைபின் பணித் திட்டத்தினை இறுதிப்படுத்துவதற்காக உள்ளீடுகளை வழங்குவதற்கும் இலங்கை ஈடுபடுவதற்கான குறித்த நுழைவு மையங்களை இனங்காண்பதற்கும் உற்பத்தியின் எதிர்காலத்தை உருவமைத்தல் முனைப்பு என்ற சமூகக் கூட்டத்தில் பங்கேற்றார் இப் பங்கேற்பின் பின்தொடர் நடவடிக்கையாக மேற்குறித்த முனைப்பின் உலக பொருளாதார மன்றத்தின் நிறைபெறத்தக்க உற்பத்தியினை துரிதப்படுத்தல் என்ற பணித்துறையின் கீழ் ஆடைத் தொழிந்துறையில் நிலை பெறுதன்மை மற்றும் புத்ததக்கங்கள் என்பன தொடர்பில் இலங்கையில் பிராந்திய முனைப்பு ஒன்றை விருந்தளித்து நடாத்தல் உள்ளடங்களாக முக்கிய ஆர்வ துறைகள் மீது உலக வர்த்தக மன்றத்திற்கு அமைச்சினால் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

செப்தம்பர் ஆரம்பப் பகுதியின் போது அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு உலக பொருளாதார மன்றத்தின் புதிய உலக புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சி இற்கான நிலையம் நணயனா அபெண்டக் அவர்களின் மூலோபாய மற்றும் அமுலாக்க தரப்பினரை வரவேற்றதுடன் இலங்கையின் தொழில்நுட்பம் மற்றும் ஆரம்பித்தல் சூழல்அமைப்பு என்பவற்றுடன் பல தொடர் ஆலோசனைகளில் ஈடுபட்டது. அதே போன்று புதுமை படைத்தல் மற்றும் தொழில் முயற்சி உபாயம் தொடர்பில் கௌரவ அமைச்சரவையும் சந்தித்தது. இவ் விஜயத்தின் ஊடாக அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கும் இலங்கை இதன் ஆரம்பித்தல் தொழில் முறைக்கும் சூழமைப்புக்குமாக விஜய வாய்ப்புகள் இனங்காணப்பட்டு உலக பொருளாதார மன்றத்தில் புதிய நிலையம் தாபிக்கப்பட்டவுடன் பின்பற்றப்படவுள்ளது. செப்தம்பர் 11 -13 காலப்பகுதியின் போது வியட்னாம் இன் ஹனோய் நகரில் ஆசியன் உலக பொருளாதார மன்றத்திற்கு கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க இன் விஜயத்திற்கான தயார்படுத்தல்களை அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு ஏற்படுத்திக் கொடுத்தது. இம் மன்றத்திற்கு அழைக்கப்பட்ட ஆசிய நாடல்லாத தலைவர்களில் இலங்கை பிரதம மந்திரி மாத்திரமே காணப்பட்டார் இந்நிகழ்வின் போது ஆசிய அரச தலைவர்களுடன் பல எண்ணிக்கையான இரு தரப்பு கூட்டங்கள் நடைபெற்றன. மேலும் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கௌரவ அமைச்சர் இலங்கைக்கு வியாட்நாமிலுள்ள முதலீட்டாளர்களை வரவழைக்கும் பொருட்டு கூட்டங்களை நடாத்தினார். இந் நிகழ்வின் போது கௌரவ அமைச்சர் ஆசிய பசுபிக்கில் அபிவிருத்தி மற்றும் முதலீட்டினை துரிதப்படுத்தல் என்ற அமர்வில் உரையொன்றை ஆற்றியதுடன், இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார மறுசீரமைப்புகள், வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்காக மன்றத்தின் பங்கேற்பாளர்களுக்கு திறக்கப்பட்ட தலைவர்களை சந்திப்போம் என்ற அமர்பில் கௌரவ பிரதம மந்திரியுடன் இணைந்து செயற்பட்டார்.

2018 செப்தம்பரில் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் ஆலோசகர் திரு அனு'க விஜேசிங்க சீனாவின் பியாஜின் இல் உலக பொருளாதார மன்றத்தின் புதிய சம்பியன் களின் வருடாந்த கூட்டம் என்ற இலங்கையின் ஆரம்பித்து வைத்தல் பேராளர்குழுவிற்கு தலைமை தாங்குவதற்கு அழைக்கப்பட்டிருந்தார் (2018 செப்தம்பர் 18 20) இவ் வாய்ப்பின் மூலம் இலங்கை ஆரம்பித்து வைத்தல்கள் (அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு மற்றும் உலகப் பொருளாதர மன்றத்தினால் போட்டிமிக்கதாக தெரிவு செய்யப்பட்டிருந்த முதற் தடவையாக உலக பொருளாதர மன்றத்தின் உலக நிகழ்வில் பங்கேற்க வாய்ப்பு பெற்றுத்தந்ததுடன் பெறுமதி வாய்ந்த சர்வதேச தொடர்பையும் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. உலக புத்தாக்க சூழல் அமைப்பை வலுப்படுத்தல் என்ற அமர்வில் பேசியதுடன் இவ்வாய்பினை அ. புத்தாக்கங்களையும் ஆரம்பித்தல்களையும் ஊக்குவிப்பதற்கு இலங்கையில் பொறுப்பேற்கப்பட்டு புதிய முயற்சிகள் பற்றி உலக பொருளாதாரமன்ற சமூகத் திற்கும் ஆர்வமுள்ள அக்கறைதாரர்களுக்கு பகிரந்து கொள்ளவும் ஆ. இலங்கையின் புதிய புத்தாக்க மற்றும் தொழில் முயற்சி உபாயம் நடவடிக்கைத் திட்டத்தை வலுப்படுத்தும் நோக்கல் நிபுணத்துவத்தை பயன்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது.

ஒக்டோபரில் உலக பொருளாதார மன்றம் முக்கிய நிறுவனசார் பங்காளராக இருந்த வர்த்தக வசதிப்படுத்தல் மீதான உலகக் கூட்டமைப்பு கௌரவ அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இலங்கையில் பல்நாட்டு கூட்டிணைப்பு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்து.

இக் கருத்திட்டமானது உலக பொருளாதார மன்றம் மூலமான முதன்மை கருத்திட்டமொன்றாக விளங்குவதுடன், சர்வதேச வர்த்தக சம்மேளனம், சர்வதேச தனியார் தொழில் முயற்சிக்கான நிலையம் மற்றும் ஐக்கிய அமெரிக்க, ஜேர்மனி, கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற இரு பக்க கொடையாளிகள் போன்றவற்றுடனான கூட்டிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. இக் கருத்திட்டத்தின் நோக்கம் கடல்சார் ஏற்பாட்டு மையமொன்றாக இலங்கையின் புதிய போட்டித்தன்மையிலிருந்து பயன்பெறுவதற்கும் இலங்கையில் சிறிய ஏற்றுமதியாளர்களுக்கு சர்வதேச கடல்சார் சரக்கு அனுப்பல்களுக்கு அதிக அனுகுவழியை பெற்றுக்கொடுப்பதுமாகும்.

# 4.4 உள்நாட்டு வர்த்தகத்தினைப் பாதுகாத்தல்

## 4.4.1 சேவைகளைத் தாராளமயப்படுத்தலுக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைகள்

### குறிக்கோள்:

அ) இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புடன் சம்பந்தப்பட்ட தற்போதைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குத் தேவையானஉத்தேச மறுசீரமைப்புக்கள் மற்றும் திருத்தங்களை அடையாளங்காணல்

ஆ) விளைவுகள்

வர்த்தக பங்குதாரர்களுக்கு மத்தியில் வலுவான உள்நாட்டு வழிமுறைகள் மூலம் சேவைகள் வர்த்தகத்தினை இலகுபடுத்தல்

இலங்கையின் வர்த்தகக் கொள்கையானது இருதரப்பு, பல்தரப்பு மற்றும் பிராந்திய மட்டத்தில் உபாயமுறைகள்பங்குதாரர்களுடன் சந்தையினை மேம்படுத்தவதற்கானதோரு மூலோபாயமாகவும் முதலீட்டினை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையிலும் ஆழமான பொருளாதார ஈடுபாட்டினைக் கொண்டுள்ளது.அதற்கமைய, அரசாங்கம் பரந்தளவிலான கட்டமைப்பு மற்றும் நோக்கெல்லையின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரங்களுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பேச்சுவாரத்தையில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, இந்த வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் பொருட்கள் வர்த்தகத்திற்கு அப்பால் முதலீடு மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் என்பனவற்றின் பன்முக எல்லைகளையும் உள்ளடக்குகிறது. தற்போது அரசாங்கம் சீனா, இந்தியா மற்றும் தாய்லாந்து என்பனவற்றுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்தைகளை மேற்கொண்டு வருவதோடு சிங்கப்பூருடனான பேச்சுவார்தை நிறைவுபெற்றுள்ளது.

ஏற்றுமதிச் சந்தையினை அதிகரித்தல், விரிவாக்கல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் உள்நாட்டு தொழிற்படைக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கல் போன்ற பிரதான இலக்குகளுடன் இலங்கை அரசாங்கம் தற்போது சிங்கப்பூர், இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பில் பேச்சுவாரத்தைகளை மேற்கொண்டுவருகின்றது. இத்தகைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற பங்குதாரர்களுக்கு மத்தியில் சேவைகள் வர்த்தகத்தினை இலகுபடுத்துகின்ற சேவைகள் வர்த்தகம் தொடர்பிலான அத்தியாயமொன்றினையும் கொண்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பில் இலங்கையில்தற்போதுள்ள ஒழுங்குமுறைகள் பற்றி வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பிலும் பங்குதாரர்களின் ஆலோசனைகளும் இச்செயன்முறையின் போது கவனத்திற்கொள்ளப்பட்டன. உள்நாட்டு ரீதியாக ஒழுங்குபடுத்தல் முறைமையொன்றின்மையின் போது சேவைகள் வர்த்தகம் அங்கீகரிக்கப்படுமாயின் உள்நாட்டுத் தொழிற்சந்தை மீது அது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என பங்குதாரர்களுக்கு மத்தியில் சில கருத்துக்கள் காணப்படுகின்றன. இதேவேளை, விசேட நிபுணத்துவம் வாய்ந்த பணியாளர்களை இலங்கைக்கு ஈர்ப்பதற்கும் அவ்வாறே, உயர் பதவிகளில் உள்நாட்டு உயர்தொழில்புரிநர்களை அமர்த்துவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வசதியளிப்பதற்கான தேவையும் ஏற்பட்டுள்ளது.

சுயாதீன உயர்தொழில்புரிநர்கள் அமைப்பு முறை 4 தொடர்பாக எந்தவொரு துவக்கத்தையோ அல்லது ஏதேனும் பொறுப்புக்களையோ வகிக்கக்கூடாது என் அரசாக்கத்தினால் கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சு உயர் தொழில்புரிநர் சேவைகள் தொடர்பாக ஒழுங்குமுறை சீர்திருத்தங்களை ஆரம்பித்துள்ளது.ஒழுங்குமுறை வேலைச்

சட்டகத்தினைத் தாபிப்பதற்குத் தேவையானகட்டமைப்பினைத் தாபிப்பது தொடர்பில் இந்நோக்கத் திற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவானது தற்போது இலங்கையிலுள்ள பல்வேறு ஒழுங்குமுறைகளை உள்ளடக்கத் தாபிக்கப்பட்டுள்ள உயர்தொழில் அமைப்புக்கள் மற்றும் கூடங்களுடன் கலந் தாலோசனைகளை நடாத்தியுள்ளன.சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் பின்னணியில் தற்போதைய சட்ட ∴ ஒழுங்குபடுத்தல் அமைப்பிற்காக உயர்தொழில் அமைப்புக்களின் முன்மொழிவுகளும் இந்நடைமுறையின்போது கருத்திற்கொள்ளப்பட்டன.

இலங்கைக்கு வருகை தருகின்ற வெளிநாட்வர்கள் தொடர்பில் தெளிவான வெளிப்படைத்தன்மைமிக்க செயன்முறையொன்றுக்கான தேவைப்பாடு என்றவகையில் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை அமுல்படுத்துவதற்காக உள்நாட்டு ஒழுங்குமுறைப் பொறிமுறை தொடர்பில் நடாத்தப்பட்ட ஆரம்ப கட்ட ஆய்வு தற்போதைய கட்டமைப்பில் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளது. இது குறிப்பாக, வர்த்தக ரீதியாக நாட்டினுள் வருவோர் மற்றும் உள்ளக பெறுநிறுவன ரீதியான உரிமை மாற்றம் என்பனவற்றினையும் உள்ளடக்குகிறது. குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்திற்கான திருத்தங்கள் இற்கும் 2018.05.30 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு சட்ட வரைவிற்றகாக அது சட்ட வரைஞர் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய மனித வள திட்டமிடல் அமைப்புடன் நேரடியாக கூட்டிணைக்கப்பட்டுள்ள இலங்கை தேசிய மனித வள மன்றம் வெளிநாட்டு பணியாளர்கள் தொடர்பில் முக்கிய பங்குவகிக்கும். புதிய திருத்தங்களைக் கண்டறிவதற்காகவும்சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை தயாரிக்கும் பணிக்காகவும் அமைச்சினால் அமைக்கப்பட்ட ஒழுங்குமுறை சீர்திருத்தக் குழு சட்டத்தற்குத் தேவையான வரைவுகளை வரைவுசெய்தள்ளது. 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை தேசிய மனித வள மன்றம் சட்டத்திற்கான திருத்தச் சட்டமானது சட்டபூர்வ அனுமதிக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டவாக்கங்கள் தொழிலாளர் சந்தை நடைமுறைகளை குறிப்பாக, இலங்கையின் வெளிநாட்டுப் பணியாளர்கள் தொடர்பிலான சட்டப் பின்னணியினை வழங்குவதோடு, சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை செயற்படுத்துவதற்கும் உதவுகின்றன.

# 5. ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் சந்தை ஆதரவளித்தல்

## 5.1 ஏற்றுமதி வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டங்கள்

### 5.1.1 படகு கட்டுநர்களுக்காக தனியான கைத்தொழில் வலயமொன்றினைத் தாபித்தல்

படகு கட்டல் கைத்தொழிலிலினை மேற்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க வாய்ப்பொன்றினை வழங்கும் வகையில்,அதற்காக,தரப்படுத்தல் மற்றும் தர உறுதிப்பாட்டிற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல், மற்றும் திருகோணமலை, கொக்கலை நீர் நிலைகளை அக்கைத்தொழிலுக்கென அர்ப்பணிக்கப்பட்ட கைத்தொழில் வலயங்களை உருவாக்குதல் உள்ளடங்கலாக இக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வசதியளிப்புக்களை மேற்கொள்வதற்கு அவசியமான ஒழுங்கு விதிகளையும் அறிமுகப்படுத்துதல் என்ற மேற்குறித்த விடயம் தொடர்பிலான முன்மொழிவு ஒன்றும் 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் (பந்தி இல.105) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் திறன் அபிவிருத்தி மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சிற்குரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. துறைமுகங்கள் மற்றும் கப்பற்போக்குவரத்து அமைச்சு மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், இலங்கை முதலீட்டுச் சபை என்பனவற்றுடக் கூட்டிணைந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இந்நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துவதற்காக உபாயமுறைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சு ஒப்படைத்தள்ளது.

தர மதிப்பீடு மற்றும் தர உத்தரவாத முறைமையின்மை என்பன படகு கட்டல் கைத்தொழில் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினைகளாகும். மீன்பிடிப் படகுகளை மீன்பிடி அமைச்சில் பதிவுசெய்யும் முறைமையொன்று காணப்பட்ட போதிலும் ஏனைய படகு வகைகளைப் பதிவுசெய்வதற்கான முறையான பதிவுமுறைமையொன்று காணப்படுவதில்லை. படகு கட்டல் கைத்தெழிலுக்காக உட்கட்டமைப்பு வசதிகள்.(குறிப்பாக நீளத்தில் 20 மீற்றருக்கும் அகலத்தில் 9 முதல் 25 மீற்றர் வரையில் அகலத்தினையும் கொண்ட பாரிய சரக்குக் கப்பல்களை) நிறுத்திவைத்தல் (நங்கூறமிடல் ∴ கப்பற்தொகுதிகள்) வெள்ளோட்டமிடல் (கப்பல் கட்டுமாண சாய்தளங்கள்∴ஏய்வுதளங்கள்) பழுதுபார்த்தல் நோக்கங்களுக்காக இறங்குதள வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் படகு கட்டல் கைத்தொழிலில் காணப்படுவதில்லை. இதன் விளைவாக, ஏற்றுமதியாளர்கள் நாட்டுக்கு ஏற்படுகின்ற வெளிநாட்டு வருமான இழப்புகள் காரணமாக பாரியளவிலான கப்பல் கட்டுவதற்கான கட்டளைகளை பொறுப்பேற்கமுடியாத நிலையில் உள்ளனர்.

**இக்கருத்திட்டம் பின்வருவனவற்றின் மீது மையப்படுத்தப்பட்டுள்ளது.**

(அ).படகு கட்டல் மற்றும் படகு கட்டல் கைத்தொழிலுக்காக இலங்கையில் ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகமொன்றினை அபிவிருத்திசெய்தல்.

(ஆ)தற்போதுள்ள படகு கட்டுநர்களுக்காக படகு இறங்கு துறை ஒன்றினை நிருமாணிப்பது உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்.

இதேவேளை,கொக்கலயிலுள்ள முதலீட்டு சபை வலயத்திலுள்ள படகு கட்டல் கம்பனிகள் குறிப்பாக, சிறிய படகுகளை தயாரிப்பதற்காக தப்ரோபேன் தீவின் முன் தளத்தை பயன்படுத்தும்.



## 5.1.2 சந்தை அடைவு ஆதரவு நிகழ்ச்சித் திட்டம்

ஆண்டொன்றுக்கு ஐ.அ.டொ. 10 மில்லியனுக்கு குறைவான பெறுமதி கொண்ட பொருட்களை ஏற்றுமதிசெய்துள்ள உள்நாட்டு கம்பனிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வர்த்தக சரிசெய்கை நிகழ்ச்சித்திட்டம் என்றவகையில் ரூபா 800 மில்லியன் வரவுசெலவுத் திட்ட ஏற்பாட்டுடன் ஏற்றுமதி சந்தை அணுகல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சர்வதேச பெறுமதிச் சங்கிலியினை சிறந்த முறையில் அடைவதற்காக ஏற்றுமதிச் சந்தைக்கான உள்ளாற்றல்மிக்க புதிய நுளைவாயல்கள் என்பன தொடர்பில் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட முன்மொழிவு (90 ஆம் பந்தியின் கீழ்) உபாயமுறைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ளது.

உலக வங்கி, தனியார்த் துறைப் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புக்கள் என்பனவற்றுடன் கலந்தாலோசித்து பின்வரும் வழிமுறைகளின் கீழான நிகழ்ச்சித் திட்டமொன்றின் மூலம் இந்த மூலோபாயத்தினை அமுல்படுத்துவதற்கு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை முன்மொழிந்தள்ளது.

1) சந்தை அணுகல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் - ஏற்றுமதிச் சந்தையில் மேலும் போட்டித்தன்மைமிக்கனவாக பரிணமிப்பதற்காக நிறுவனங்களுக்கு ஒத்துழைத்தல்.

2) தொழில்முயற்சியாளர் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டம் - புதிய உற்பத்திகள், தொழில்நுட்பங்கள் அல்லது செயன்முறைகள் என்பனவற்றினை அபிவிருத்திசெய்வதற்காக நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.

3) தொழில்முயற்சியாண்மை முன்னெடுப்பு இலங்கையின் புதிய தொழில் முயற்சியாளர்களை அடையாளங்காணல் மற்றும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.





## 5.1.3 பல்தேசிய நிறுவன சென்றடைவு கருத்திட்டம்

ஜி2ஜி அல்லது ஜி2பி நிகழ்ச்சித் திட்டங்களினுடாக மூன்று முதல் ஐந்து உலகளாவிய இலத்திரனியல் மற்றும் மின்சார பல்தேசிய கம்பனிகள் என்பனவற்றை ஈர்க்கும் வகையில் இந்நிகழ்ச்சித் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. அதன் மூலம் இலங்கையின் இலத்திரனியல் மற்றும் மின்சாரக் கம்பனிகள் உலகளாவிய பல்தேசிய கம்பனிகளின் வழங்கல் சங்கிலிகளுடன் இணைந்துகொள்வதற்கும், கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கும், வடிவமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்ற கம்பனிகளோடு இலங்கையில் இருந்தவாறே ஒப்பந்தங்களை செய்துகொண்டு வடிவமைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் முடியும். சர்வதேச சந்தையில் இலங்கையின் இலத்திரனியல் மற்றும் மின்சாரத் துறையினை நிலைநிறுத்துவதற்காக உலகளாவிய பல்தேசிய கம்பனிகளின் அதிக முதலீடுகளை கவருவதற்காக அரசாங்கம் இலக்காகக்கொண்டு செயற்பட்டுவருகிறது.

மூன்று வருட காலப்பகுதியில் (2018 - 2020)இலங்கைக்கு 3-5 உலகளாவிய இலத்திரனியல் மற்றும் மின்சார உற்பத்திப் பல்தேசிய கம்பனிகளை கவருவதற்காக மின் மற்றும் இலத்திரனியல் துறைக்கான உற்பத்தித் துறைக்கான பல்தேசிய கூட்டுத்தாபனத்தின் பரந்தளவிலான திட்டத்தினை முன்னெடுப்பதற்காக பொருத்தமான அனுபவமும் மற்றும் ஆற்றலும் கொண்ட வெளிநாட்டு ஆலோசகர் ஒருவர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நியமிக்கபபடுவார்.

## 5.1.4 தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பினைத் தாபித்தல்

2022 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதித் துறையானது ஐ.அ.டொ. 5 மில்லியன் என்ற இலக்கினை அடைந்துகொள்வதற்காகவும் ஏற்றுமதி வளர்ச்சியினைத் துரிதப்படுத்தும் வகையிலும் ரூபா 300 மில்லியன் வரவுசெலவுத் திட்ட ஏற்பாடொன்றுடன் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பு (82 மற்றும் 83 ஆம் பந்திகளின் கீழ்) என்ற தலைப்பின் கீழ் அதன் உள்ளாற்றல் அடையாளங்காணப்பட்டு, முன்மொழிவொன்று 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான 3 வருட தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 1044.5 மில்லியன் அரசாங்கத்திற்கு செலவாகும் எனவும் அதற்காக மொத்தமாக ஒதுக்கப்பட்ட ரூபா 300 மில்லியனில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 155 மில்லியன் செலவிடப்படுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் சந்தைக் கேள்விகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் உயர் திறன் மிக்க தொழிற்படையினை உருவாக்குவதற்கும் உலகளாவிய ரீதியில் இலங்கையின் தகவல்தொழில்நுட்ப.ஃ வியாபார செயன்முறை முகாமை ஐஊவு.ஃடீஆஇன் கொள்ளளவு மற்றும் அது தொடர்பிலான விழிப்புணர்வினை உருவாக்கல், கம்பனிகள் அடுத்த கட்ட நகர்விற்காக தங்களை தயார்படுத்திக் கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்கல் என்பன மூலம் இலங்கையின் ஐஊவு.ஃடீஆ இன் துறையின் அபிவிருத்திக்கு இந்நிகழ்ச்சித் திட்டம் ஒத்துழைப்பு வழங்கும். இந்நிகழ்ச்சித் திட்டமானது பின்வரும் முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1) வலுவான நாட்டு வர்த்தக மூலோபாயம் மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றின் மூலம் உலகளாவிய ரீதியிலான அடைவு எல்லையினை அதிகரிக்கச்செய்தல்

2) உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஐஊவு ஃடீஆ துறையின் தொழில்வல்லுநர்களின் கெள்திறனினைக் கட்டியெழுப்பல் என்பனவற்றுடன் ஐஊவு.ஃடீஆ இன்குறிப்பிட்ட சில திறன்களை ஒன்றிணைத்தலினை அபிவிருத்திசெய்தல்.

3) ஐஊவு.ஃடீஆ துறை தொடர்பிலான தொழில்வாய்ப்புக்கள் தொடர்பில் பிராந்தியங்களில் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் மற்றும் பிராந்தியங்களில் அதிகளவில் தகவல்தொழில்நுட்ப நிறுவனங்களை தாபிப்பதற்காக நிதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.

4) பிராந்தியத்தில் துவக்கநிலைகளிலுள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை கண்டறிந்து, அவை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளை அடைவதற்கு வளர்ச்சியடைவதற்காக உதவுதல்.

## 5.1.5 வர்த்தக ஊக்குவிபப்புத் தளத்தினைத் தாபித்தல்

ரூபா 25 மில்லியன் வரவுசெலவுத்திட்ட ஏறப்பாடொன்றுடன் வர்த்தக ஊக்குவிபப்பு தளமொன்றினைத் தாபித்தல் என்ற முன்மொழிவு 2018 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையில் (100 ஆவது பந்தியில்) உள்ளடக்கப்பட்டுள்ளது. வர்த்தக ஊக்குவிபபு தத் ளம் என்ற இந்நிகழச் சித் திட்டத்தினை செயற்படுத்தும் பணிக்காக உபாயமுறைகள் அபிவிருத்தி மறறு் சர்வதேச அமைசச் ானது இந்நிகழச் சித் திட்டத்தின் முகவர் நிறுவனமான இலங்கை ஏறறு் மதி அபிவிருத்தி சபைக்கு வழங்கியுள்ளது.

ஏறறு் மதியாளர்கள் மறறு் ம் கொள்வனவாளர்கள் என்போருக்கிடையில் சந்திபப் ுக்களை இலகுபடுத்துவதனை வர்த்தக ஊக்குவிபபுத ் தளம் தனது பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. சர்வதேச ரீதியாக சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக, இத்தளமானது ஆர்வத்தின் அடிப்படையில் தகவல்களைத் தேடுவதறக் ாக வடிவமைக்கப்பட்டுள்ள அளவுருக்கள் அடிப்படையில் ஏறறு் மதியாளர்களக்கும் கொள்வனவாளர்களுக்கும் தேவையான தகவல்களை வழங்குவதறக் ான இடைத்தரகராக செயற்படும். வர்த்தக ரீதியான வாடிக்கையாளர்களை அதிகம் கவரும் வகையில் புதிய அம்சங்களை ஒருங்கிணைப்பதறக்ாக வர்த்தக ஊக்குவிபபுத தளமானது தறபே ாது வடிவமைக்கப்படுகிறது. இத்தளமானது இலங்கையின் பொருட்கள் மறறும் அல்லது சேவைகளை தறபே ாது கொள்வனவுசெய்கின்ற அல்லது கொள்வனவுசெய்யவுள்ள வெளிநாட்டுக் கம்பனிகள் அல்லது இலங்கையின் தறபே ாதைய ஏற்றுமதிக் கம்பனிகள் அல்லது எதிர்காலத்தில் இலங்கையின் ஏறறு் மதிக் கம்பனிகளாவுள்ள கம்பனிகள் போன்ற குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வசதிகளை வழஙக் ும் வகையில் வடிவமைக்கப்படுகிறது.ஏறறு் மதி வியாபாரத்துடன் பிணைைக்கப்பட்டள்ள பல்வேறு துறைசார்ந்த வாடிக்கையாளர்களுக்கும் ஏறறு் மதி அபிவிருத்தி சபையானது என்ன வழங்குகிறது என்பது தொடர்பில் அனைவருடனும் வலுவான தொடர்புகளை ஏற்படுத்தும்.

வர்த்தக ஊக்குவிபபுத் தளத்துடன் கூட்டிணைக்கப்பட்டுள்ள இலத்திரனியற் சந்தையானது ஆன்லைன் மூலம் இலங்கையின் பொருட்கள் மறறு் ம் சேவைகளை விற்பனை செய்வதற்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தளமாகும் என்பதோடு இத்தளம் வர்தகத்திற்கு வர்த்தகம் பொருத்தப்பாடுகளை மேறகொ ளவ்தறக் ான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும். இலங்கை ஏறறு் மதியாளர்கள் தமது சிறந்த உறப் த்திகளை இணையதளத்தில் காட்சிபப் டுத்துவர். சிறந்த ஏறறு் மதிக் கம்பனிகளின் கம்பனி விபரம் மறறும் பிரத்தியேக ஏற்றுமதியாளர்களின் வீடியோக்கள் என்பனவும் சிறந்த வர்த்தக பங்காளர்களை அடையாளங் காண்பதறக்ாக சர்வதேச கொள்வனவாளர்களுக்கு வசதியளிக்கும் வகையில் இத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 5.2 ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் புதிய ஊக்குவிப்பு மூலோபாயம்

- ### தேசிய ஏற்றுமதி மூலோபாயம்

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து உபாயமுறைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பனவற்றினால் முன்னெடுக்கப்பட்ட, பிரதான அபிவிருத்திக் கருத்திட்டமான, தேசிய ஏற்றுமதி மூலோபாயமானது, அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் அதன் அனைத்துப் பங்குதாரர்களோடும் செயற்பட ஆரம்பித்தது. அதன் மூலம் தற்போது வேகமாக வளர்ந்துவருகின்ற ஆசிய ஏற்றுமதி நாடுகளை பிடித்துக்கொள்வதற்கான வாய்ப்பினை இலங்கை பெற்றுள்ளது.

### புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை என்பவற்றை ஊக்குவித்தல்

உபாயமுறைகள் அபிவிருத்தி மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சானது உலக வங்கி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்பனவற்றுடன் இணைந்து ஏற்றுமதிப் போட்டித்தன்மைக்காக குறிப்பாக, சிறிய மற்று நடுத்தர தொழில்முயறச்ிகளை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு, புத்தக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை என்பனவற்றினை ஊக்கப்படுத்துவதற்கான மூலோபாயம் ஒன்றினை வடிவமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தின் கீழ் அடையாளங் காணப்பட்ட

வர்த்தக ஒத்துழைப்பு தொழிற்பாடுகளில் ஒன்றாக புத்தாக்கம், தொழில்முயற்சியாண்மை மற்றும் மூலோபாயம் என்பன அரச மற்றும் தனியார் துறை பங்குதாரர்களின் ஆதரவுடன் அபிவிருத்திசெய்யப்படுகின்றன.

## ஏற்றுமதியினை பன்முகப்படுத்தல்

ஏற்றுமதியினை நோக்கிய வளர்ச்சி மூலோபாயத்தினூடாக பொருட்களுக்கான பன்முகத்தன்மைக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது அதிகம் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. ஹாவார்ட் கென்னடி பாடசாலையின் வழிகாட்டலுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது இலத்திரனியல் மற்றும் மின்னணுப் பொருட்கள் (அச்சிடப்பட்ட சர்கியூட் பலகைகள், இன்சுலேடட் கம்பிகள், மின் பனல் பலகைகள்) ரப்பர் அடிப்படையிலான பொருட்கள்(வாகன பாகங்கள் இறப்பர் முலாமிடப்பட்ட பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், படகு கட்டல் போன்ற துறைகளை அடையாளங்கண்டுள்ளது. உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கையினை பன்முகப்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது தற்போது துறைசார் வல்லுநர்கள் நிகழ்ச்சித் திட்டமொன்றில் முதலீட்டுச் சபையுடன் இணைந்து ஈடுபடுகின்றது. இணையப் பொருட்கள், இறப்பர் முலாமிடப்பட்ட ஏனைய பொருட்கள், படகு கட்டல்,மின்னியல், மின்சாரப் பொருட்கள், இயந்திர சாதனங்கள், சோலர் பனல்கள், தானியங்கி கூறுகள், உணவு பதப்படுத்தல், கப்பல்கள், சுற்றுளா மற்றும் ஓய்வுநேரம், மருந்தாக்கலுக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், கனிப்பொருள் உற்பத்திகள், அச்சிடப்பட்ட சரக்கியுட் பலகைகள் மற்றும் தயாரிப்புத் துறைகள் என்பனவற்றிற்காக பிட்ச் புத்தகங்கள் தயாரிக்கப்படுகன்றன.

## தேசிய தரத்தினாலான உட்கட்டமைப்பு

2016 ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தரக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்ட ஐரிசி மற்றும் யுனிதோ, உலக வங்கி என்பனவற்றின் ஆதரவுடன் தேசிய தரத்திலான உட்கட்டமைப்பு மூலோபாயம் உருவாக்கப்பட்டுள்ளது.தேசியதரத்திலானஉட்க ட்டமைப்பின் நிறுவன மற்றும் ஒழுங்குமுறை வேலைச் சட்டகத்தினை மேம்படுத்தல்,இலக்கிடப்பட்ட சந்தைகளுக்காக திறக்கப்பட்ட ஏற்றுமதிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தினை பெற்றக்கொள்ளல், முன்னணி ஏற்றுமதித் துறைகளின் தேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக தேசிய தரத்திலான உட்கட்டமைப்பு வேலைச் சட்டகத்தினை பலப்படுத்தல் என்பனவற்றை இந்த மூலோபாயம் உள்ளடக்கியுள்ளது. அரச மற்றும் தனியார் துறைப் பங்குதாரர்களைக் கொண்டுள்ளதேசிய தரத்திலான உட்கட்டமைப்பு ஆலோசனைக் குழுவானது உபாயமுறைகள் திட்டத்திலுள்ள செயற்டுபாடுகளை செயற்படுத்துவதற்கு ஆரம்பித்துள்ளது.

## 5.3 ஏற்றுமதிச் செயலாற்றுகை 2016-2018

### ஏற்றுமதிச் செயலாற்றுகை - 2018




வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியிலிருந்து இலங்கையின் வெளிநாட்டு செலவாணி வருவாய் 2017 இன் ஐ.அ.டொலர் 15.1 பில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளில் கணிசமான அதிகரிப்பொன்றினை பதிவு செய்து ஐ.அ.டொலர் 16.7 பில்லியன் மைற் கல்லினை அடைந்து 2018 இன் போது 11மூ இனால் வளர்ச்சியடைந்தது. இது 2018 இற்கான ஐ.அ.டொலர்17.4 பில்லியன் இலக்கிற்கு எதிராக ஏறக்குறைய 96மூ அடைவாகும்.

வணிகப் பொருள் ஏற்றுமதி வருவாய்கள் கடந்த வருடத்தில் ஐ.அ.டொலர் 11.4 பில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2018 இல் ஐ.அ.டொலர் 11.6 பில்லியனை பதிவு செய்துள்ளது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் வியாபார செயன்முறை முகாமைத்துவம், நிர்மாணம், நிதிச் சேவைகள், ஏற்பாட்டு சேவை அத்துடன் ஆரோக்கியம் சுற்றுலா துறைகளின் சேவை ஏற்றுமதிகளின் மதிப்பீடு காலப்பகுதியன் போது ஐ.அ.டொலர் 4.5 பில்லியன் இனை அடைந்து 22மூ ஒட்டுமொத்த வளர்ச்சியொன்றினை காண்பித்தது.

மேலும் 2017 இல் இற்கு சமாந்திரமாக 2018 இல் ஒட்டுமொத்தமாக ஐ.அ.டொலர் 1 பில்லியன் மாதாந்த வணிகப் பொருள் ஏற்றுமதி வருவாய்கள் (மார்ச் ஐ.அ.டொலர் 1,107.7 மி), (யூன் ஐ.அ.டொலர் 1,024.5 மில்லியன்) (யூலை ஐ.அ.டொலர் 1,037.4 மி) (ஆகஸ்ட் ஐ.அ.டொலர் 1,055.2 மி) மாதாந்த வணிகப் பொருள் ஏற்றுமதி வருவாய்கள் பதிவாகியுள்ளன.



புதிய தேசிய ஏற்றுமதி உபாயத்தின் கீழ் குறிப்பாக இலத்திரனியல் மற்றும் மின்சார ஏற்றுமதிகள் 16.2 மூ இனாலும் உணவு மற்றும் குடிபானங்கள் 22.6 மூ இனாலும் அதிகரித்து இனங்காணப்பட்ட கவனம் செலுத்தப்படுகின்ற துறைகள். சிலவற்றில் வழுவான செயலாற்றுகை காணப்பட்டது. எனினும் வாசனைத் திரவியங்கள் மற்றும் கவனம் செலுத்தப்பட்டவைகள் 10.8மூ இனாலும் உற்பத்தி கட்டத்தில் காணப்படுகின்ற இக் கட்டளைகளுக்கு அமைவாக படகு தயாரித்தல் 50மூ இற்கு மேலும் வீழ்ச்சியடைந்துள்ளன.

மொத்த ஏற்றுமதிகளில் 33மூ இணைக் கொண்டுள்ள ஆடைத் துறை 12மூ வரி சலுகைக் கொண்ட ஜீஎஸ்பி, நன்மையின் விளைவாக ஐரோப்பிய யூனியடமிருந்து புதிய கட்டளைகளை பெற்றுக் கொண்டமையினால் 2018 இன் போது 100 மூ இற்கு மேற்பட்ட இலக்கு அடைவினை பதிவு செய்தது. அதே வேலை மொத்த ஏற்றுமதிகளில் 5மூ கொண்டுள்ள இறப்பர் முடிவுருத்தப்பட்ட உற்பத்திகள் ஏற்றுமதிகள் 3.78 மூ இனால் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன.







ஏற்றுமதி அடைவிடயங்கள் வாரியாக 2017 உடன் ஒப்பிடுகையில் ஐரோப்பியனம் ஒன்றியத்திற்கான ஏற்றுமதி வருவாய் 5.15மூ அதிகரித்துள்ளதுடன், ஐ.அமேரிக்காவிற்கான ஏற்றுமதிகள் 5.65மூ இனால் அதிகரித்துள்ளன.

தென்னாசிய பிராந்தியத்திற்கான ஏற்றுமதிகள் (2017 ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 996 மில்லியன் உடன் ஒப்பிடுகையில்) ஐ.அ.டொலர் 1,097 மில்லியனை அடைந்து 10.12மூ கணிசமாக வளச்சியடைந்தது. விசேடமாக இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் 2017 இன் போது ஐ.அ.டொலர் 689.4 மில்லியனிலிருந்து 2018 இல் ஐ.அ.டொலர் 767.6 மில்லியன் ஆக 13.35மூ குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளது. அதேவேலை ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் ஸ்ரேலிங் பவுன் மதிப்பிரக்கம் மற்றும் இங்கிலாந்தின் வெளியேற்றத்தின் காரணமாக நுகர்வோர் சந்தை உறுதியின்மை போன்றவற்றின் பிரதான காரணத்தினால் 5.15மூ இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.

## ஏற்றுமதிச் செயலாற்றுகை – 2018 மற்றும் உற்பத்திகள் மற்றும் சேவைகள் வாரியாக ஏற்றுமதி இலக்குகள்

பெறுமதி ஐ. அ. டொலர் மில்லியன

| | 2018 இலக்கு | 2017 சன-டிசம்பர் | 2018 சன-டிசம்பர் | அடைவு % | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆடை | 5,200 | 5,015 | 5,300 | 101.92 | 5,980 | 6,877 | 7,565 | 8,321 | 9,153 | 10,069 | 11,075 |
| தேயிலை | 1,650 | 1,512 | 1,408 | 85.33 | 1,898 | 2,182 | 2,400 | 2,640 | 2,904 | 3,195 | 3,514 |
| இறப்பர் சார்ந்வை | 1,000 | 874 | 907 | 90.70 | 1,150 | 1,323 | 1,455 | 1,600 | 1,760 | 1,936 | 2,130 |
| இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் | 200 | 266 | 277 | 138.50 | 230 | 265 | 291 | 320 | 352 | 387 | 426 |
| தேங்காய் சார்ந்வை | 647 | 588 | 588 | 90.88 | 745 | 856 | 942 | 1,036 | 1,140 | 1,254 | 1,379 |
| வாசனைத் திரவியங்கள், வாசனை எண்ணெய்கள் | 550 | 399 | 356 | 64.73 | 633 | 727 | 800 | 880 | 968 | 1,065 | 1,171 |
| படகு தயாரித்தல் | 115 | 97 | 26 | 22.61 | 132 | 152 | 167 | 184 | 202 | 223 | 245 |
| இலத்திரணியல் மற்றும் இயந்திரம் | 427 | 353 | 410 | 96.02 | 491 | 564 | 649 | 746 | 858 | 987 | 1,135 |
| கடலுணவு | 375 | 241 | 266 | 70.93 | 431 | 496 | 546 | 600 | 660 | 726 | 799 |
| அலங்கார மீன் | 17 | 15 | 16 | 94.12 | 20 | 22 | 25 | 27 | 30 | 33 | 36 |
| காய்கறிகள் | 33 | 28 | 29 | 87.88 | 38 | 44 | 48 | 53 | 58 | 64 | 70 |
| பழங்கள் | 49 | 42 | 40 | 81.63 | 56 | 65 | 71 | 78 | 86 | 95 | 104 |
| பிற ஏற்றுமதி பயிர்கள் ஏனைவை | 144 | 87 | 56 | 38.89 | 165 | 190 | 219 | 251 | 289 | 333 | 382 |
| மலர்கள் மற்றும் பசுமையாக | 19 | 16 | 16 | 84.21 | 22 | 25 | 28 | 30 | 33 | 37 | 40 |
| உணவு மற்றும் பானங்கள் | 449 | 294 | 357 | 79.51 | 516 | 593 | 682 | 784 | 902 | 1,037 | 1,193 |
| பெற்ரோலியப் பொருட்கள் | 500 | 292 | 374 | 74.80 | 575 | 662 | 728 | 801 | 881 | 969 | 1,065 |
| ஏனைவை | 1,745 | 1,132 | 1,085 | 62.18 | 2,006 | 2,308 | 2,469 | 2,644 | 2,818 | 2,994 | 3,180 |
| மொத்த வனிகபொருட்கள் ஏற்றுமதிகள் | 13,120 | 11,360 | 11,641 | 88.73 | 15,088 | 17,351 | 19,085 | 20,995 | 23,094 | 25,404 | 27,944 |
| ஐதகவல்தொழில்நுட்பம்வியாபாரசெயன்மறை முகமைத்துவம் | 1,312 | 970 | 1,312 | 100.00 | 1,660 | 2,007 | 2,097 | 2,181 | 2,258 | 2,324 | 2,376 |
| கட்டுமான | 85 | 69 | 85 | 100.00 | 94 | 105 | 119 | 134 | 152 | 171 | 194 |
| நிதி சேவைகள் | 367 | 263 | 367 | 100.00 | 404 | 452 | 511 | 578 | 653 | 738 | 833 |
| போக்கு வரத்து | 2,544 | 2,376 | 2,544 | 100.00 | 2,799 | 3,135 | 3,542 | 4,003 | 4,523 | 5,111 | 5,776 |
| ஆரோக்கிய சுற்றுலா | 2 | N/A | 193 | 9,650 | 2 | 3 | 3 | 3 | 4 | 4 | 5 |
| மொத்த சேவைகள் | 4,310 | 3,678 | 4,501 | 104.43 | 4,959 | 5,702 | 6,272 | 6,899 | 7,590 | 8,348 | 9,184 |
| மொத்த வனிகப்பெருட்கள் மற்றும் சேவைகள் | 17,430 | 15,038 | 16,142 | 92.61 | 20,047 | 23,053 | 25,357 | 27,894 | 30,684 | 33,752 | 37,128 |

மூலம்: இலங்கைச் சுங்கம், இலங்கை மததிய வங்கி, ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் செய்யப்பட்ட அளவீடுகள்

சேவை ஏற்றுமதி மதிப்பீடுகள் சென்மதி நிலுவை வகைப்படுத்தலுக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பெறுமதிகளை அடிப்படையாக கொண்டலை

வணிகப்பொருள் ஏற்றுமதிச் செயலாற்றுகை – சனவரி -டிசம்பர் சந்தைகள் வாரியாக

பெறுமதி ஐ. அ. டொலர் மில்லியன்

| விபரம் | 2017 சன-டிசம்பர் | 2018 சன-டிசம்பர் | வளர்ச்சி% |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 2,911.46 | 3,075.82 | 5.65 |
| ஐக்கிய இராஜ்யம் | 1,035.17 | 981.84 | -5.15 |
| இந்தியா | 689.36 | 767.57 | 11.35 |
| ஜேர்மனி | 538.42 | 612.35 | 13.73 |
| இத்தாலி | 529.37 | 576.92 | 8.98 |
| பெல்ஜியம் | 346.63 | 359.21 | 3.63 |
| ஐக்கிய அரபு இராஜ்யம் | 274.14 | 289.63 | 5.65 |
| நெதர்லாந்து | 220.39 | 257.16 | 16.68 |
| சீனா | 414.67 | 230.59 | -44.39 |
| யப்பான் | 206.96 | 225.22 | 8.82 |
| துருக்கி | 232.68 | 218.58 | -6.06 |
| கனடா | 208.92 | 209.9 | 0.47 |
| பிரான்ஸ் | 190.11 | 197.23 | 3.75 |
| ர'யா | 188.40 | 192.14 | 1.99 |
| ஆஸ்திரேலியா | 209.75 | 185.99 | -11.33 |
| மற்றவர்கள் | 3,163.58 | 3,260.57 | 3.07 |
| மொத்த | 11,360.01 | 11,640.73 | 2.47 |

மூலம்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, ஏற்றுமதி அபிவிருத்தி சபை

# 6 பொது நிருவாகம்

## 6.1 2018.12.31 இல் உள்ளவாறு அமைச்சின் அனுமதித்த பதவியணி

| இல. | பதவி | சேவையும் தரமும் | அனுமதித்த பதவியணி 2018.12.31 | தற்போதயை பதவியணி 2018.12.31 | வெற்றிட பதவியணி 2018.12.31 |
|---|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | இ.நி.சே (விசேட தரம்) | 01 | 01 | - |
| 2 | மேலதிக செயலாளர் | இ.நி.சே( விசேட தரம்) | 01 | 01 | - |
| 3 | மேலதிக செயலாளர் | இ.தி.சே( விசேட தரம்) | 01 | 01 | - |
| 4 | பிரதம கணக்காளர் | இ.க.சே(தரம் 1) | 01 | 01 | - |
| 5 | பிரதம உள்ளக கணக்காய்வாய்ளர் | இ.க.சே(தரம் 1) | 01 | 01 | - |
| 6 | பணிப்பாளர் | இ.தி.சே(தரம் 1) | 01 | 01 | - |
| 7 | பணிப்பாளர் | இ.தி.சே(தரம் 1) | 01 | 01 | - |
| 8 | சிரேஸ்ட செயலாளர் | இ.தி.சே(தரம் 1) | 01 | 01 | - |
| 9 | சட்ட அலுவலர் | திணைக்களசார் | 01 | 01 | - |
| 10 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் | இ.நி.சே (விசேட தரம் I /III) | 05 | 04 | 01 |
| 11 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் | இ.தி.சே (விசேட தரம் I /III) | 06 | 05 | 01 |
| 12 | உதவி செயலாளர் | இ.நி.சே (விசேட தரம் I /III) | 03 | 01 | 02 |
| 13 | உதவி செயலாளர் | தற்காலிகம் | 01 | - | 01 |
| 14 | உள்ளக கணக்காய்வாளர | இ.க.சே( ( தரம் II /III ) | 01 | - | 01 |
| 15 | கணக்காளர் | இ.க.சே ( ( தரம் II /III ) | 01 | - | 01 |
| 16 | செயலாளருக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் | தற்காலிகம் | 01 | 01 | - |
| 17 | நிருவாக அலுவலர் | அ.மு.உ.சே ( அதிவிசேட தரம் ) | 01 | - | 01 |
| 18 | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | இ.த.தொ.சே( தரம் II ) | 01 | - | 01 |
| 19 | மொழிபெயர்ப்பாளர் | இ.மொ.சே ( தரம் II /III ) | 01 | - | 01 |
| 20 | அபிவிருத்தி அலுவலர் | அ.அ.சே ( தரம் I/II/III ) | 225 | 166* | 59 |
| 21 | புகைப்படப்பிடிப்பாளர் | தற்காலிகம் | 01 | 01 | - |
| 22 | காணொலிப்பிடிப்பாளர் | தற்காலிகம் | 01 | 01 | - |
| 23 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ. சே ( தரம் I/II/III ) | 21 | 15 | 06 |
| 24 | சாரதி | சா.சே(I/II/III/ அதிவிசேட தரம் ) | 09 | 07 | 02 |
| 25 | அலுவலக உதவியாளர் | அ.உ.சேட(விசேட தரம் I/II/III/ ) | 08 | 08 | - |
| 26 | புகைப்பட உதவியாளர் | தற்காலிகம் | 01 | 01 | - |
| | **மொத்தம்** | | **296** | **219** | **77** |

# 6.2 நிறுவனசார் கட்டமைப்பு



# பின்னிணைப்பு 1

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

**அறிமுகம்**

எந்தவொரு நிதி, கணக்கீடு அல்லது செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடாது அமைச்சின் செயலாளருக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற தனிப்பட்ட அலகாக உள்ளக கணக்காய்வு காணப்படுகின்றது. அமைச்சின் சீரான மற்றும் வினைத்திறனான செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை பலப்படுத்துவதற்கு பங்களிப்புச்செய்வது இவ்வலகின் பிரதான பெறுப்பாகும்

**அலகின் பிரதான செயற்பாடுகளாக,**

- அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வருகின்ற அசைசு மற்றும் நிறுவனங்களின் தற்போதைய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீடுசெய்தலும் முகாமைத்துவத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தலும்,
- அமைச்சின் வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இணக்கப்பட்டுக் கணக்காய்வு மற்றும் நிதிக் கணக்காய்வு செயலாற்றுகை என்பனவற்றினை மேற்கொள்ளளும்
- அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுக் கூட்டம் மற்றம் அதன் நிறுவனங்களின் முன்னேற்றத்தைப் பகுப்பாய்வுசெய்தல்
- நியதிச் சட்ட முகவர்களினால் உருவாக்கப்படுகின்ற சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் என்பனவற்றுடன் அமைசச்சு மற்றும் நிறுவனங்கள் என்பன இணங்கிச்செல்கின்றன என்பனவற்றை உறுதிப்புத்தல்.
- அமைச்சின் செயலாளரினால் வேண்டப்பட்டவாறு நிறுவனங்கின் செயற்பாடுகள் தொடர்பில் விசேட விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

**உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்ளல்**

முகாமைத்துவ கணக்காய்வுப் பிரிவினால் வெளியிடப்பட்ட னுஆயு.'.2009.'.(1) ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கேற்ப, ஆண்டில் ஆரம்பத்தில் ஆரம்ப கட்ட அறிக்கையொன்று தயார்படுத்தப்பட்டதோடு, காலாண்டு அடிப்படையில் 3 உள்ளக கணக்காய்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு உள்ளக கணக்காய்வும் அமைச்சின் முக்கிய செயற்பாட்டுப் பரப்பெல்லைகளை உள்ளடக்கிக்கியுள்ளதோடு, அது வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கட்ட அறிக்கையில் ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும் உள்ளடக்கப்பட்ட முக்கிய செயற்பாட்டுப் பரப்பெல்லையினை பின்வரும் அட்டவணைகள் பிரதிபலிக்கின்றன.

| | உள்ளடக்கப்பட்ட விடயங்கள் |
|---|---|
| ஆரம்ப கட்ட அறிக்கை | 1. வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கை<br>2. சம்பள ஒப்பீட்டாய்வு<br>3. செலவின முகாமை<br>4. சுய விபரக் கோவைகள்<br>5. வங்களிலிருந்தான ஆதனக் கடன்கள்<br>6 ̇ வரவுப் பதிவேடு. விடுமுறைகள் |

| காலாண்டு | உள்ளடக்கப்பட்ட விடயங்கள |
|---|---|
| முதலாம் | 1. சம்பளம், நிருவாக நடைமுறைகள்<br>2. பொது வைப்புக் கணக்கு<br>3. வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள்<br>4. 2017ஆம் ஆண்டுக்கான முடிவுக் கணக்குகள்<br>5. கடிதப் பகிர்வுகள்<br>6. முற்பண 'பி' கணக்கு<br>7. குத்தக உடன்படிக்கையின் கீழ் அலுவலக இடப் பயன்பாடு<br>8. 2017 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை மூடுதல்<br>9. பதவி வெற்றிடங்களும் இடமாற்றங்களும்<br>10 பெறுகைச் செயற்பாடுகள் |

| காலாண்டு | உள்ளடக்கப்பட்ட விடயங்கள |
|---|---|
| இரண் டாம் | 1. உறுதிசீட்டு தயாரித்தல்<br>2. நிலையான சொத்துக்கள், பொருட் பதிவேட்டு கட்டுப்பாடு<br>3. கட்டு நிதிக் கணக்கு<br>4. வாகன பராமரிப்பு<br>5. வர்த்தக வசதி<br>6. 2017 ஆம் ஆண்டிற்கான இருப்புப் பொருள் பற்றிய ஆய்வு கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல் |
| மூன்றாம் | 1. சம்பளம், வேதனம்<br>2. உறுதிசீட்டு தயாரித்தல்<br>3. வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள்<br>4. வாகன பராமரிப்பு மற்றும் திருத்தம்<br>5. திட்ட வரைவு, செயலாற்றுகை அறிக்கை, இருப்புப் பொருள் பற்றிய ஆய்வு, பெறுகைத் திட்டம் என்பனவற்றை சமரர்பித்தல்<br>6. அபிவிருத்திச் செயற்பாடுகள்<br>7. ஆலோசகர்களுக்கான வெளிநாட்டுப் பிரயாணங்கள் |

## உள்ளக கணக்காய்வு அறிக்கை

அடையாளங் காணப்பட்ட விடயங்களின் விபரம், அமைச்சு மற்றும் அதன் நிறுவனங்கள் மீதான அவற்றின் தாக்கம் மற்றும் அவற்றினை எதிர்கொள்வதற்கான விதிந்துரைப்புக்கள் என்பன கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த விடயங்கள் காலாண்டு கணக்காய்வு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டள்ளன.

முகாமைத்துவ கணக்காய்வுப் பிரிவினால் வெளியிடப்பட்ட னுஆயு.'.2009.'.(1) ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கேற்ப, ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளுக்காக இரண்டு (02) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் போன்ற அமைச்சின் விடய பரப்பெல்லையினுள் வருகின்ற நிறுனங்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டன. அக்கூட்டத்தில் அமைச்சு மற்றும் அதன் பரப்பெல்லையின் கீழ் வரும் நிறுவனங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் என்பன மீளாய்வுசெய்யப்பட்டன.

பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரையுயும் அரச முகாமைத்துவ உதவியாளர்கள் இருவரையும்(02) மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (பயிலுநர்) ஒருவரையும் (01) உள்ளக கணக்காய்வு அலகு உள்ளடக்கியுள்ளது.

## பின்னிணைப்பு 2

## 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்- அமைச்ரவைப் பத்திரங்கள்

| அமைச்சரவை விஞ்ஞாபன இல. | திதகி | விடயம் |
|---|---|---|
| MoDSIT/3/CAB/18/03 | 10/01/2018 | முதலீட்டுச் சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்- 2015 |
| MoDSIT/3/CAB/18/04 | 10/01/2018 | இலங்கை – சிங்கபூர் புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைசாத்திடல்- இறுதிப்படுத்தப்பட்ட பதிப்பு |
| MoDSIT/3/CAB/18/05 | 08/02/2018 | ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மேலதிகப்பணிப்பாளர் நாயகம் (நிதி, நிர்மாணம்) திருமதி பீ கே சுமித்ததாரச்சி என்பவரின் சேவையினை 60 வயதுக்கு அப்பால் நீடிப்பதற்கான அனுமதி |
| MoDSIT/3/CAB/18/06 | 14/02/2018 | இணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>இலங்கை, இந்தியா மற்றும் யப்பான் நிறுவனங்களுக்கிடையில் கொழும்பு துறைமுகத்தில் திரவ இயற்கை வாயு முனையம் - FSRU தாபிப்பதற்காக முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை |
| MoDSIT/3/CAB/18/06 | 23/04/2018 | திருமதி ரி வி ஏ தமயந்தி எஸ் கருணாரத்தன என்பவரை அறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்திற்கான இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகமாக நியமிதத்ல் |
| MoDSIT/3/CAB/18/08 | 29/03/2018 | இணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>திருகோணமலையில் மேல் தாங்கிப் பண்ணை இணைந்த அபிவிருத்தி |
| MoDSIT/3/CAB/18/09 | 28/02/2018 | திரவ இயற்கை வாயு புரிந்துணர்வு உடன்படிக்கை இணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் |
| MoDSIT/3/CAB/18/10 | 28/02/2018 | கொழும்பு பாலதக்ஷவாவத்தையில் அமைந்துள்ள (பேர ஏரி மற்றும் சங்கிரிலா ஹோட்டல் இடையில்) அரச காணியில் கலப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தினை நிறுவதற்காக பெரியல் ரியல் எஸ்டேட் ஹோல்டிங் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கான திருத்தம். |
| MoDSIT/3/CAB/18/11 | 28/02/2018 | பிங்கிரியவில் முன்மொழியப்பட்ட கைத்தொழில் வலயம். |
| MoDSIT/3/CAB/18/12 | 30/05/2018 | இலங்கைக்கான தேசிய ஏற்றுமதி உபாயத்தினை பின்பற்றுதல்) (2018-2022) |
| MoDSIT/3/CAB/18/13 | 04/04/2018 | அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>முதலீட்டுச் சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்- 2015 |
| MoDSIT/3/CAB/18/14 | 22/03/2018 | மேலதிக வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் -2018<br>குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்தின் வீசா முறைமையில் வீசா நீடிக்கப்பட்ட வகைகள் மற்றும் தொடர்புடைய கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கான திருத்தங்கள் |
| MoDSIT/3/CAB/18/15 | 29/03/2018 | அம்பாந்தோட்டையில் நேரடி வெளிநாட்டு முதலீட்டுடன் ஏற்றுமதிக்காக பெற்றோலிய சுத்திகரிப்புச் சாலையினை நிறுவுதல் |
| MoDSIT/3/CAB/18/16 | 03/04/2018 | பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பான தற்போதய நிலை இந்தியாவுடனான) |
| MoDSIT/3/CAB/18/17 | 11/04/2018 | இலங்கையில் முதலீட்டு சேவைகளுக்கான தனி வழி முதலீட்டு வசதிப்படத்தல் செயலணியினை தாபித்தல். |
| MoDSIT/3/CAB/18/19 | 16/05/2018 | 1948 இன் குடியகல்வு குடிவரவுத்தின் கீழ் தொழில்வீசாவுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தல். |
| MoDSIT/3/CAB/18/19 | 14/05/2018 | 1981 இன் 66 ஆம் இலக்க மஹாப்பொல உயர்கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவுக்கான திருத்தங்கள் |

| | | |
|---|---|---|
| MoDSIT/3/CAB/18/20 | 17/05/2018 | ஏற்றுமதி சந்தை அனுகுவழி உதவித்திட்டத்தின் மீதான தேசிய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவினை அமுல்படுத்தல் |
| MoDSIT/3/CAB/18/21 | 30/05/2018 | இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கையினை சமர்ப்பிதத்ல் - 2016 |
| MoDSIT/3/CAB/18/22 | 18/06/2018 | இந்தியாவுடனான பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பான தற்போதய நிலை |
| MoDSIT/3/CAB/18/23 | 18/06/2018 | தாய்லாந்து இராச்சிய அரசாங்கம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் இடையிலான முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடனபடிக்கையின் நோக்கெல்லை |
| MoDSIT/3/CAB/18/24 | 20/06/2018 | தாய்லாந்து இராச்சிய அரசாங்கம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் இடையிலான உபாய பொருளாதார பங்குடமை புரிந்துணர்வு உடன்படிக்கை |
| MoDSIT/3/CAB/18/25 | 29/06/2018 | நிர்வாக தடைகள் காரணமாக முடிவுறாதுள்ள பாரியளவு வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கருத்திட்டங்களை துரிதப்படுத்தல் |
| MoDSIT/3/CAB/18/26 | 17/08/2018 | முதலீட்டுச் சபையின் கீழ் தொழிற்படுகின்ற மேசைப்பொருடகள்/சமயலறைப்பொருட்களளுக்காக 20% தொடக்கம் 30% வரை உள்நாட்டு விற்பனைகளை அதிகரிப்பதற்கான கோரிக்கை |
| MoDSIT/3/CAB/18/28 | 08/08/2018 | சந்தை அனுகுவழி உதவித்திட்டத்தின் மீதான தேசிய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவினை அமுல்படுத்தல |
| MoDSIT/3/CAB/18/29 | 19/07/2018 | 2008 இன் 14 இலக்க உபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3)4) உபபிரவின் நியதிகளின்படி வர்தத்மானி அறிவிதத்லுக்கான திருத்தங்கள் - வாட்டர் புரன்ட் புரோபடிஸ் லிமிடட் |
| MoDSIT/3/CAB/18/30 | 20/07/2018 | அமைச்சரவை விஞ்ஞாபனம்<br><br>SC FR 155/2018, SC FR 155/2018, SC FR 158/2018, SC FR 159/2018 மற்றும் SC FR 160/2018 மற்றும் SC FR 161/2018 அடிப்படை உரிமை மீறல் வழக்குகளுக்கான சில பிரதிவாதிகள் தொடர்பில் தனியார் சட்டத்தரணிகளின் ஆலோசனைச் சேவையினைப் பெற்றுக்கொள்ளல் |
| MoDSIT/3/CAB/18/31 | 24/07/2018 | தேசிய வர்த்தக பேச்சுவார்தைக் குழு |
| MoDSIT/3/CAB/18/32 | | இணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உயர்கல்விக்காக உன்னதமான நிலையமொன்றினை தாபிப்பதற்காக கெவகலையில் இலங்கை முதலீட்டுச்சபைக்குச் சொந்தமான காணியை குத்தைக்கு விடல் |
| MoDSIT/3/CAB/18/33 | | அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வரத்தக அமைச்சருக்கு ஆலோசகரை நியமிதத்ல்<br>திரு. அஜித் டாமென் குணவர்த்தன |
| MoDSIT/3/CAB/18/34 | 30/07/2018 | நீக்கப்பட்ட செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) மாற்றீடு செய்கின்ற அதன் ஆ அட்டவணையில் 2017 இன் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தினை உள்ளடக்குவதற்கு 1978 இன் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபை சட்டத்திற்கான திருத்தம். |
| MoDSIT/3/CAB/18/35 | 16/08/2018 | இலங்கைப் பொருளாதாரத்திற்கான வர்தத்க சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்கல் |
| MoDSIT/3/CAB/18/36 | 16/08/2018 | இலங்கை-சிங்கப்பூல் வர்தத்க உடன்படிக்கை மற்றும் தொடர்புபட்ட கருமங்கள் மீது பல்வேறு தரப்பினர்களாலும் சார்த்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சரவைக்கான தெளிவுபடத்தல் குறிப்பு |
| MoDSIT/3/CAB/18/37 | 03/09/2018 | தேசிய தகவல் தொழில்நுட்ப /வியாபார செயன்முறைப்படுத்தல் முகாமைத்துவ ஏற்றுமதி வளர்ச்சி முயற்சியனை செயலாற்றுவதற்கு தகவல் தொழில்நுட்ப முயற்சிக்கான தேசிய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவினை அமுலாக்கல். |
| MoDSIT/3/CAB/18/38 | 15/10/2018 | உலக மின்னியல் மற்றும் மின்சார செயற்பாட்டாளர்களைக் கவருவதற்காக பலதேசிய கூட்டுத்தாபன சென்றடைவ நிகழ்ச்சித்திட்டம் |
| MoDSIT/3/CAB/18/39 | 27/08/2018 | படகு உற்பத்திக் கைத்தொழிலுக்காக உட்கட்டமைப்பு வசதிகளைத் தாபித்தலும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை உருவாக்குதலும். |

| | | |
|---|---|---|
| MoDSIT/3/CAB/18/40 | 23/08/2018 | முதலீட்டு சூழல் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவக ஆதனப் பொறிமுறையினை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட இ-காணிப்பதிவக கருத்திட்டம். |
| MoDSIT/3/CAB/18/41 | 23/08/2018 | பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை மீதான பேச்சவார்த்தைகளின் தற்போதய நிலை. |
| MoDSIT/3/CAB/18/42 | 03/09/2018 | இலங்கை முதலீட்டுச் சபையின் கொழும்பு 2, வொக்ஷால் வீதியல் உள்ள 136 பேரச் அரச காணியினை தொடர்மாடி கட்டடத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்திற்காக இலவச அளிப்பாகவும் குத்தகைக்கம் உரித்தளித்தல். |
| MDSIT/DEV/Miscellaneous | 03/09/2018 | ரஜரட மீளெழுச்சி" சனாதிபதி நிகழ்ச்சித் திட்டம் "பொலநறுவையினை நாம் மீளெழுச்சி செய்வோம்" இன் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள குருநாகலில் இருந்த தம்புள்ள ஊடாக ஹபரன இற்கு புதிய புகையிரதப்பாதையினை நிர்மாணித்தல் - என்ற கருத்திட்டத்தின் கருத்திட்ட முன்மாழிவாளர் சைனா ஸ்டேட் கன்ஸ்ட்றக்சன்ஸ் என்ஜியரிற் போபரேசன் லிமிடட் உடனான அமைச்சரவை நியமித்த தேசிய பெறுகை குழுவின் அவதனிப்புகள் |
| MoDSIT/3/CAB/18/43 | 04/09/2018 | களுத்துர மில்லனிய- பண்டாரகமவில் எற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் ஒன்றினைத் தாபித்தல் |
| MDSIT/DEV/AD6/DO1/Cabob | 17/09/2018 | களுத்துர. றைகமவில் கைத்தொழில் மற்றும் தொழில்நுடப அபிவிருத்தி சுப்பர் வலயம் ஒன்றினை தாபித்தல் தொடர்பான அவதானிப்பு |
| MDSIT/CAB-0/18/10 | 17/09/2018 | மாலாபே- இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்பாடுகளை மீள ஒழுங்கமைத்தல் தொடர்பான அவதானிப்புகள் |
| MoDSIT/3/CAB/18/44 | 03/10/2018 | பிங்கிரியவில் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் ஒன்றினைத் தாபித்தல் |
| MoDSIT/3/CAB/18/45 | 21/09/2018 | யாழ்ப்பாணத்தில் அடைகாப்புக் கருவிகள் /துரிதமாக்கிகளுக்கான தொழில்நிலையமொன்றினை தாபித்து தொழில்படுத்தல். |
| MDSIT/DEV/AD6/DO1/Cabob | 01/10/2018 | மில்லாவ கைத்தொழில் நிருவாகப் பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான அவதானிப்புகள் |
| MoDSIT/3/CAB/18/46 | 02/10/2018 | இலங்கைக்கான தேசிய புத்தாக்க மற்றும் தொழில்முயற்சி உபாயத்தினை (2018-2020) பின்பற்றுதலும் நடைமுறைப்படத்தலும் ( |
| MDSIT/DEV/AD6/Cabob2018 | 10/10/2018 | கைத்தொழில் நகரொன்றுக்காக ரக்கட்டான தெங்கு மற்றும் காலநடை பண்ணையிலிருந்து 400 ஏக்கர் காணிக்கான கோரிக்கை தொடர்பான அவதானிப்புகள். |
| MDSIT/DEV/AD05/INDIA/MOU | 10/10/2018 | இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் தொழிலபடுத்தல் மற்றும் முழுமையான அபிவிருத்தி தொடர்பான அவதானிப்புகள் |
| MODSIT/03/CAB/18/48 | 17/10/2018 | இடங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்றுமதியாளர்களை பதிவுசெய்வதற்கான திட்டத்தினை நீக்குதல் |
| MODSIT/03/CAB/18/49 | 10/2018 | தேசிய தனியொரு தகவல் வழிக்கான உயர்மட்ட வழிநடாத்தல் குழுவொன்றினை தாபித்தல். |
| MoDSIT/3/CAB/18/31/-ii | 25/10/2018 | தேசிய வர்த்தக பேச்சுவார்த்தை குழுவிற்கான திருத்தங்கள் |
| MOITIP/03/CAB/18/52 | 19/11/2018 | தேசிய வர்தத்க கொள்கையினை தயாரித்தல் |
| MODSIT/03/CAB/18/52 | 15/10/2018 | ஆரோக்கிய துவாய்கள் மீதான இறக்குமதி செஸ் அறவீட்டினை நீக்குதல் |
| MODSIT/03/CAB/18/53 | 22/10/2018 | முதலீட்டுச் சபையின் செயலாற்றுகையின் சிறப்பம்சங்கள் |
| MODSIT/03/CAB/18/58 | 29/11/2018 | இலங்கையில் முதலிடுங்கள் ஊக்குவிப்புக்கான விசேட முன்மொழிவுகள் |

# பின்னிணைப்பு 3

பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரைவக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புகள்
அமைச்சில் முதலீட்டாளர் பிரச்சினைகள் மீளாய்வுக்கு குழுவில் எழுப்பப்பட்ட கொள்கை அமுலாக்கல் பிரச்சினைகள், முதலீடு மற்றும் முதலீட்டாளர் பிரச்சினைகள் தொடர்பில் பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரைவக் குழுவுக்கு பல பத்திரங்கள் சதர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| தொ. இல. | திதகி | முகாமைத்துவம் மீதான அமைச்சரைவக் குழுவுக்கான பத்திரங்கள் |
|---|---|---|
| 1 | 02/01/2018 | முதலீட்டாளர் சூழல் மறுசீரமைப்புத் திட்டத்தின் கடன்தீர்க்க வகையற்ற தன்மை மீதான உத்தியோகபூர்வ செயலணியொன்றினை நியமித்தல். |
| 2 | 03/01/2018 | இலங்கை, கொழும்பு துறைமுகத்தில் திரவ இயற்கை வாயு முனையமொன்றினை நிறுவுதல் |
| 4 | 03/01/2018 | இலங்கை, கொழும்பு துறைமுகத்தில் திரவ இயற்கை வாயு முனையமொன்றினை நிறுவுதல் |
| 3 | 08/02/2018 | கொழும்பு பாலதக்ஷவாவத்தையில் அமைந்துள்ள (பேர ஏரி மற்றும் சங்கரிலா ஹோட்டல் இடையில்) அரச காணியில் கலப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தினை நிறுவதற்காக பெரியல் ரியல் ஸ்டேட் ஹோல்டிங் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கான திருத்தம். |
| 5 | 16/02/2018 | நிஜிட் டயர்கோப்பரேஷன் பிரைவட் லிமிடட் இற்கு வரி வீடுமுறைக்காலத்தினை நீடித்தல் |
| 6 | 16/02/2018 | ஹொரனை, வகவத்த கைத்தொழில் வலயததில் நிஜிட் டயர்கோப்பரேஷன் பிரைவட் லிமிடட் இறகு வசதியளித்தல் |
| 7 | 16/02/2018 | அம்பாந்தோட்டையில் ஏற்றுமதிக்காக ஆண்டுக்கு 10மி தொ பெற்றோலிய சுத்திகரிப்புச் சாலையினை நிறுவுவாற்கான முதலீட்டு முன்மொழிவு |
| 8 | 19/02/2018 | வர்தத்க வசதிப்படுத்தல் மற்றும் தேசிய வரத்தக வசதிப்படுத்தல் என்பவற்றுக்கான தேசிய தனியொரு சாரளம் |